


## கையூட்டுக் காலம்!

கையூட்டால் கல்வி கற்றுக்
கையூட்டால் பட்டம் பெற்றுக்
கையூட்டால் பணியி லமர்ந்து,
கையூட்டால் புகழும் பெற்றுக்
கையூட்டே நோக்க மதாய்க்
கையூட்டே வாழ்க்கை யதாய்க்
கையூட்டே பயனென் றுரைக்கும்
கையூட்டுக் காலமிது!
கையூட்டு ஞாலமிது!
கையூட்டார் வாழ்வ தரிதே!




சுவடி : 25
ஓலை : 2
விலை
உருபா : 2-00

Scanned with CamScanner

# நமக்கு வந்த மடல்கள்.

○: 1366: பொதுவுடைமை என்பது நம்மிடம் இல்லாதது: இல்லாத இந்தப் பொதுவுடைமையைப் பெற்ற பின்தான், கலை, இலக்கியம், பண்பாடு என்று இயல்பாக உள்ளவற்றைப் பரப்பும் அடுத்த கட்டத்திற்கு நகர முடியும். எனவே நம்முடைய தலையாய (பிரதான) பணியாக இருக்க வேண்டியது பொதுவுடைமையைப் பெறும் பணிதான். கலை இலக்கியப் பண்பாடெல்லாம், உருவாக்கம் (உற்பத்தி) பகிர்வு, போன்ற பொருளியல் (பொருளாதாரச்) சூழலிலிருந்துதான் பிறக்கின்றன: தனியாக மாந்த மூளையிருந்து அன்று. பெரும்பான்மையான மக்கள் ஒரு வேளை சாப்பாட்டிற்கே வழியில்லாத நிலையில், அவர்களிடம் போய் கலை இலக்கியம், பண்பாடு என்று பேசினால், புரிந்து கொள்வார்களா? புரிந்து கொள்ளவும் முடியாது, அதை அவர்களால் ஏற்றுக் கொள்ளவும் முடியாது: பெருஞ்சித்திரனாரே! முதலில் நீர் இதை உணர்ந்து செயல்படும். மேலும் நீங்கள் பரப்பும் கலை, இலக்கியம் பண்பாடு என்பது நிலமுதலாளியத்திற் (நிலப்பிரபுத்துவத்திற்) கானது. எனவே நீங்கள் நடத்திக் கொண்டிருக்கும் இப்போதைய பணி அறிவீனமானது; வீணானது, புரட்சிக்கும் ஒற்றுமைக்கும் எதிரானது. உடன் மாற்றிக் கொள்ள முயற்சி செய்யவும்!

—கே. சுப்பு, சென்னை-80

○: 1867: பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய ஐயா அவர்கட்கு வணக்கம். நீண்டநாள் இடைவெளிக்குப் பிறகு கடந்த பத்து நாள்களுக்கு முன்பு தங்களைக் கண்டு மகிழ்ந்தேன்.

தங்களின் தளரா ஊக்கம், சலியா உழைப்பு, நெகிழா நோக்கம்: தமிழினத்திற்காக வாழ் நாளெல்லாம் உழைத்தும் தங்களுக்கென ஒரு பயனும் காணா நிலையில் தொடர்ந்து தொண்டாற்றும் மிகப் பெரும் பரந்த உள்ளம் ஆகியவற்றை அன்று போலவே தங்களைச் சந்தித்த நாளிலும் கண்டு பூரிப்புற்றேன்.

தங்களின் அரியவுரைகளை அரை நொடி கேட்பினும் அளப்பறிய ஆற்றல் உள்ளத்தில் பிறக்கிறது! உணர்வு ஏற்படுகிறது! இருப்பினும் ஏனோ இவற்றைத் தமிழகம், வைரம் கண்டும் வாய் கொத்தி அகலும் கோழி போலத் தங்களைத் தங்களின் கொள்கைகளை உணர்ந்து கொள்ளாமல் இருக்கிறது! எனினும் என் போன்ற ஆயிரமாயிரவர் உங்களை உணராமல் இல்லை! உரிய வழியில் போற்றாமல் இல்லை! ஆயினும் அனைவரும் உணர்தல் வேண்டும்! அதற்கான காலம் ஒருநாள் வாய்க்கும் என்னும் நம்பிக்கை என்னுள்ளே ஒளிர்கின்றது!

'புதையம்பிற் பட்டுப் பாடூன்றும் களி'றெனத் தென்மொழி, தமிழ்நிலம், 'தமிழ்ச்சிட்டு'களைத் திறம்பட நடத்தி வருவது, தங்களின் மிகப்பெரும் மனவலிமையினைக் காட்டுகிறது:

அன்பன்,

—புலவர் ப. எழில்வாணன், க. மு. கல், இ. பள்ளபட்டி

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்.)

Scanned with CamScanner



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும் அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல் துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால் எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே

[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]



# தென்மொழி

மொழி—இனம்—நாடு.

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை-முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாதல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி:847829)

சுவடி 25] ௨௦௧௬ கடகம்-மடங் (ஆக-செப், 89') [ஓலை: 2

# மீறிச் செயல்!



உலக மக்களின் செயற்பாடுகளை, போக்கின் போதல், பொதுவெனப்படுதல், நோக்கின் இயங்கல், நோற்றன செய்தல், தூக்கியது ஆற்றல், துவங்கியது முடிக்கல், மேற்கொளல் இயற்றல், மீறியது செய்தல்—என எட்டு வகையாகப் பிரிக்கலாம்.

மக்களாகப் பிறந்த மிகப் பலர், தாங்கள் மாந்தப் பிறவி பெற்றிருந்தாலும், விலங்குகளினின்று சிறிதே முன்னேறியவர்களாகவே விளங்குவதைப் பார்க்கலாம். இயல்பாக அவர்கள் பெற்ற மாந்த அறிவைப் பயன்படுத்தி, அவர்களுக்கு விளங்கிய மன அறிவை மட்டும் கொண்டு, பெரிதும் அவர்களின் உடல் உழைப்பைக் கொண்டே வாழ்கின்ற தன்மையராக அவர்கள் இருப்பதை நாம் காணலாம். அவர்களின் நிலை அவர்கள் பிறந்து வாழ்கின்ற சூழ்நிலைகளால், மற்ற மக்களின் தாக்கங்களால், ஏற்பட்டதாக ஒருவாறு கருதினாலும், அவர்களுக்கு எவ்வளவு வாய்ப்பளித்து, அவர்களின் நிலைகளை மாற்றமுற்பட்டாலும், அவர்களின் வாழ்வியல் தன்மைகளை ஓரளவே மாற்றுதல் இயலும்

Scanned with CamScanner

என்பதை, அம்முயற்சிகளில் ஈடுபட்டவர்களின் பட்டறிவுகளைக் கொண்டு நாம் அறிதற் கியலும்.

ஆற்று நீரில் விழுந்து கிடக்கும் சருகு சக்கைகளும், செத்தை, சிதறுகளும், மட்டை மிளாறுகளும், இலை தழைகளும்—எங்கன் அவ்வாற்று நீர் ஓட்டத்திலேயே மிதந்து போகும் போக்கினைக் கொண்டனவாக உள்ளனவோ, அதேபோல், மிகப் பெரும்பான்மையான மக்கள் பிறவியர்களும், இப்பெருமாந்த வெள்ளத்-துன் கால்போன பக்கம் கடுகித் திரிந்து, மனம்போனவாறு மாந்தி மகிழ்ந்து, உழன்று ஓய்ந்து பிறந்த பயன் ஒன்றுமின்றி உயிர் தவிர்ந்து ஒழிதல் காண்கிறோம். இவர்களின் வாழ்வும் செயலும் போக்கின் போதல் என்னும் வகைப்பட்டதாம் என்க. பிறத்தல், இருத்தல், இறத்தல் எனும் மூன்று சொற்களிலேயே எழுதித் தீர்வதாகும் இவ்வாறானவர்களின் வாழ்க்கை வரலாறு.

இனி, இன்னொரு கூறினராகிய இரண்டாம் கூறினர், இம்-முதற் கூறினரினும் சிறிதே மேம்பட்ட வகையினராவர். அவர்கள், பொதுவெனப்படுதல் என்னும் உத்தியின் பாற்பட்டு உயிர் வாழ்கிறவர் ஆவர். இவர்களின் வாழ்வு பிறத்தல், இயங்கல், துய்த்-தல், இறத்தல் என்னும் நாற்படி நிலைகளில் இயங்குவதாகும். எவ்வகை மன நோக்கமும் இன்றித் துய்த்தல் (அநுபவித்தல்) என்னும் ஆசையின்பாற் பட்டு, உண்பதும், உடுப்பதும், மகிழ்தலும், மறைதலும் ஆன நிலைகளைத் தவிர, வேறு எவ்வகை அறிவு நாட்டமும் அற்றவராக, மாந்தப் பொதுவான வாழ்நிலை-யிலேயே, தண்டவாளத்து ஓடும் தொடர்வண்டி எவ்வாறு போவதும் வருவதுமாக இயங்கி, நிலை பெறுகின்றதோ, அவ்-வாறான இயங்கு திணையாக மட்டும் இருந்து மறைந்து போவோர் இவர். இவர்கள் முன்னையரை விடச் சிறிது மனவுணர்வு மிக்க-வர். ஆனாலும் இவ்விரு தன்மையரும் மக்களாய்ப் பிறந்து மாக்களாகவே வாழ்ந்து மறைவோர் ஆவர்.

இனி, மூன்றும் நிலை வாழ்க்கையினராகச் சிலர் உளர். அவர்-கள் நோக்கின் இயங்கல் என்னும் உத்தியின்பாற் படுவோர் ஆவர். இந்நிலையினர் தங்களைப் போல் உள்ள மக்களைப் பார்த்துத் தாமும் அவ்வாறு வாழ்தல் வேண்டும் என்னும் அறிவுணர்வு சிறிது வாய்க்கப் பெற்றவர். அதனால், ஓர் எளிய நிலைக் கல்வி-யும் இவர்கள் கற்பர். எனினும் அக்கல்விப் பயனால் வாழ-வியலாது, உடல் உழைப்பு மிக்க தொழிற்பயனால் கூட்டம், குடும்பம் என்னும் கருத்தில் தம் வாழ்வு நலன்களைக் கருதுபவர். மக்கள் இனம் முழுவதையும் இவர்கள் அளாவி நினையாது, தம்மையும், தம்மைச் சார்ந்த தம் உற்றார் உறவினர்களையும் மட்டுமே கருத்தில் கொண்டு, அவர்களில் மேம்பட்டு விளங்கு-பவர்களைப் போலத் தாமும் முன்னேற வேண்டும், பொருள் ஈட்டல் வேண்டும் என்னும் ஏதாமொரு நோக்கத்தைக் கொண்டு வாழும் உணர்வு பெற்றவராவர், இவர்! இத்தகையோர் பெரும்பாலும் கைத்தொழில், உழவு, சிறுசிறு சில்லறை வாணிகம் முதலியவற்றில் ஈடுபட்டு, அவற்றையே தம் நோக்கமாகக்

கொண்டு இயங்குபவர்கள் ஆவர். மொத்தத்தில், மக்களினத்தின் அடிக்கூறாக இவர்கள் வாழ்ந்து வருபவர்கள்.

அடுத்து, இம்மூன்றும் நிலை வாழ்க்கை யரினும், சிறிது மேம்பட்டு நின்ற நான்காம் நிலை வாழ்வினர், நோற்றன செய்தல் என்னும் உத்தியின்பாற்பட்டு வாழும் தன்மையர். இத்தகையார்க்கு வாழ்க்கை ஒரு பொருள் பொதிந்த இயக்கமாகத் தோன்றும். மூன்றும் நிலை வாழ்வின் உத்தியாகிய நோக்கின் இயங்கல் எனும் தன்மை சிறிது மேலோங்கித் தோன்றும் வாழ்வினராவர், இவர். இவர்கள் நிலையில் நோக்கம் என்பது ஒரு குறிக்கோளைத் தழுவியிருக்கும்; அக்குறிக்கோள் இன்ன வகையில் முயன்று, இன்ன நிலை முன்னேற்றத்தை நாம் பெறுதல்வேண்டும் என்னும் மனஉறுதியையும் அதற்கான அறிவுழைப்பையும் கொண்டு விளங்குவதாகும், இத்தகையவர்களின் வாழ்க்கைத் தன்மை!

'நோற்றல்' என்பது ஒரு கருத்தின்மேல் மனத்தையும் அறிவையும் கொண்டு செலுத்துதல் ஆகும். மனவொருமையும் அறிவு நுட்பமும், உடல் அமைவும் இதற்குத் தேவை. இத்தகைய உணர்வுள்ளவர்கள் ஓர் அறிவு வாழ்க்கையை வாழ்கின்ற தன்மையர். கல்வியாளர்கள், கலைஞர்கள், நுண்திறலாளர்கள், அரசியல், பொருளியல் அறிஞர்கள் முதலியோர் இத்தகுதி நிலை வாழ்க்கை வாழ்பவர்கள். இவர்கள் 'அறிவுஜீவி' என்னும் தரத்தினராகவும், முதலாளியத் தன்மையுடையவராகவும், முழுத் தந்நலம் கொண்டவராகவும், ஒரோவிடத்து, இத்தகைய ஏதோ ஒருசிலர், சில பொதுநல உணர்வுகளைக் கொண்டவர்களைப் போல் நடப்பவர்களாக இருந்தாலும், அவற்றையும் தம் கரவான, ஊதியங்கருதும் தந்நல நோக்கிற்கே பயன்படுத்திக் கொள்பவர்களாகவும் விளங்குபவர்கள். எனவே, இவர்கள் வாழ்க்கை பட்டம், பதவிகள், பற்பல நலத்துய்ப்புகள், வளமும் நலமும் கொண்ட நிறைவு நிலைகள் முதலியவற்றைக் கொண்டதாக இருக்கும் என்று தெற்றெனத் தெளிந்து கொள்க.

இவர்கள் உலகை நன்கறிந்து உலகியல் வாழ்வையே குறிக்கோளாகக் கொண்டு இயங்குபவர்கள். பொதுவுணர்வு இவர்களில் சிலர்க்கு இருந்தாலும், பொதுத் தொண்டுணர்வு இவர்களிடம் அறவே இராது. சிறிது பெயரும் புகழும் நாடி, தம் செல்வ மிதப்பால் கொடை உணர்வும் இவர்களுக்கு இருக்கும். ஆனால் அதனடிப்படையில், வேறு பல நன்மைகளை மறைமுகமாகப் பெறும் கரவு நோக்கம் கொண்டவர்கள். இவர்களின் நோற்றல் உணர்வெல்லாம் முழுக்க முழுக்கத் தம் நலமும் தம் குடும்ப நலமும் கொண்டதாகவே இருக்கும். தம் உறவினர்களைக்கூட இவர்கள் அவ்வளவு நெருங்கவிட மாட்டார்கள். தம் இனத்தை இவர்கள் திரும்பியும் பார்க்க மாட்டார்கள். இன நலச் சிந்தனையோ, மொழிநலச் சிந்தனையோ இவர்களிடம் துளியும் இரா; ஆனால் அவை உள்ளன போல், தம் செல்வ வள வன்மையாலும் பதவி அதிகார வாய்ப்புகளாலும், தாமாக வந்து

வாய்க்கும் விளம்பரத் தன்மைகளாலும், வாய்ப் பறையும் எழுத்-துப் பதிவுகளும் செய்து கொள்ளுவர். முடிந்தால் இவர்கள் பொதுநலத் தொண்டர்களை விலைக்கு வாங்கியும் தமக்கெனப் பயன்படுத்திக் கொள்வர். இவர்களின் செல்வ வலிமையால் அரசியலில் ஈடுபடவும் தயங்கமாட்டார்கள். மொத்தத்தில் இவர்-களின் குறிக்கோளே உலகின் இன்பங்கள் அனைத்தையும் துய்த்து-விடவேண்டும் என்னும் நோக்கம் கொண்டதாக இருக்கும். இவர்களின் வாழ்க்கை பொருள், இன்ப வாழ்க்கையாகும்.

இனி, ஐந்தாம் நிலை வாழ்க்கை உத்தியாகத் தூக்கியது ஆற்றல் என்னும் படிநிலை உணர்வு கொண்ட வாழ்க்கையது ஆகும். உலக வாழ்வியல் நிலைகளில் நன்மையெது, தீமை எது, சிறந்தது எது, தாழ்ந்தது எது என்பன பற்றியெல்லாம் எண்ணிச் சீர்தூக்கிப் பார்த்து. அவற்றுள் தாம் உயர்ந்தனவாக கடைப்-பிடிக்க வேண்டியனவாகக் கருதுவனவற்றைத் தம் வாழ்க்கை நோக்கமாகக் கொண்டு இயங்குபவர்களின் நிலையாகும். இவர்-களிடம் ஓரளவு தந்நலம் மறுத்த தன்மையும் பொதுநலம் பேணும் தன்மையும் இருக்கும். அப்பொதுவுணர்வினால் மக்களியல் கூறு-களையும் மக்கள் வரலாற்று விளக்கங்களையும் அறிந்து கொண்டு, தங்களைச் சுற்றியுள்ள மக்களின் நன்மை கருதிச் சில பல பொது-வுணர்வுச் செயல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வாழ்வார்-கள். வாழ்வியல் என்பது தந்நலமும் பொதுநலமும் கலந்தது என்னும் பிரித்துணரும் உணர்வு இவர்களுக்கிருக்கும். ஆனால் அதற்காகத் தங்களைப் பெரிதும் வருத்திக் கொள்ளாதவாறு, ஓரளவு தங்களுக்குத் துன்பம் நேராத வண்ணம் பொதுவுணர்வில் ஈடுபடுவார்கள்.

மொழியுணர்வும், இலக்கியவுணர்வும், கலையுணர்வும், பொது-நலங் கருதி ஈடுபடும் அளவிட்ட பொதுத் தொண்டுணர்வும் இருக்-கும். ஆனால் அவை கைகளைக் கடித்துக் கொள்ள விரும்பாத பொதுவுணர்வாகவே இருக்கும். இத்தகையவர்கள் இலக்கிய நிகழ்ச்சிகள், கலை, பண்பாட்டு நிகழ்ச்சிகள், அறிவுத் திறனாய்வுக் கூட்டங்கள் இவற்றில் பங்கு கொள்வர்; அந்நிகழ்ச்சிகளை முன்-னின்றும் நடத்துவர். பொருளளவில் ஓரளவு தங்களுக்கு நேரும் இழப்புகளையும் மனமுவந்து ஏற்கும் உணர்வும் இருக்கும். ஆனால், இத்தகையவர்கள் என்றும் எச்சரிக்கையாகவே இருப்பதால் போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் என்பனவற்றில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளமாட்டார்கள். ஒரோவொருகால் அவர்-கள் பிறரின் வலியுறுத்துதல்களுக்கும், கட்டாயப்படுத்துதல்களுக்-கும் இசைந்து பொதுநல ஈடுபாட்டால் உடன்பட்டுச் சிறைப்-பட்டாலும் அல்லது வேறு தண்டனைகளுக்கு உட்பட்டாலும், சூடு கண்ட பூனையைப் போல் மீண்டும் அத்தகைய கூட்டத்தாருடன் இணைந்து செயல்பட முன் வரமாட்டார்கள். மொத்தத்தில் இவர்களுக்கு வாழ்க்கை அகப்புற நிலைகளில் சம உணர்வுடைய-தாகவே இருக்கும். குறிப்பாகத் திருக்குறளில் கூறப் பெற்றிருக்-கும், 'அன்பும் அறனும் உடைத்தாயின் இவ்வாழ்க்கை, பண்பும்

பயனும் அது'—என்னும் வாழ்வியல் கூற்றுக்கு மிகப் பொருந்திய-வர்களாக, இத்தகையோர் இருப்பர் என்க.

இனி, ஆறும்நிலை வாழ்வியல் உத்தியாக இங்குக் காட்டப் பெறுவது துலங்குவது முடுக்கல் என்பதாகும். இது முன்னைய உத்தியாகிய 'தூக்கியது ஆற்றல்' என்னும் வாழ்வியல் கூறினும் மேம்பட்ட—படிநிலை வளர்ச்சி பெற்ற-கூறாகும். இது நன்று, இது தீது எனும் தூக்கியறியப் பெற்ற உணர்வினும் துலங்கிய உணர்வு இது. தூக்கியறியும் உணர்வு பிரித்தறியப் பெறும் உணர்வு என்றால், அதிலும் மிகச் சிறந்ததான உணர்வை அறிந்து, அவ்வுணர்வும் அதையொட்டிய செயல்களும் எங்கும் பரவும்படி அதனை மேம்படச் செய்வது—முடுக்கிவிடப்படுவது ஆகும் இவ்வுணர்வு. நல்லவற்றையெல்லாம் அறிந்து அவற்றுள் மிக நல்லதைக் கண்டுணர்வதும் அதையே முடுகிய செயலுக்குட் படுத்துவதாகும் முயற்சி என்க.

துலங்குவது—விளங்கித் தோன்றுவது. முடுக்கல் அது சிறிய அளவில் விளங்கினால் அதனையே பரவலாக்குவது; வேகப்படுத்து-வது; அனைவர்க்கும் போய்ச் சேரும்படி வலிமையூட்டுவது; இது, சிறிய ஒளியைப் பேரொளியாக்குவது; சிறிய நெருப்பைப் பெரு-நெருப்பாக்குவது—என்க.

இஃது எல்லார்க்கும் எளிதான செயலன்று; எல்லார்க்கும் தூக்கியறிதல் கடினம். இனி, தூக்கியறியப்பட்ட உணர்வுகளில் மேம்பட்ட உணர்வைத் துலங்கிக் காண்பது அதனினும் கடினம்; இனி, அவ்வாறு துலங்கியறியப்பட்ட உணர்வை மேலும் முடுக்கி விடும் செயலில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது மிகமிகக் கடினம்; பெரும்பாலும் புலப்படுத்தப் பெறும் வாழ்வியலின் மேம்பட்ட உத்திகளில், தூக்கியறியப் பெறும் நல்லுணர்வும் மிகவும் பொது நலந் தாங்கியதாக இருக்கும். இனி, அதைவிடத் துலங்கித் தோன்றும் உணர்வோ, பிற அனைத்தையும் புறந்தவிர்த்து விட்டு; அதனையே மிகவும் மேம்பட்டதாகக் கருதும்படி செய்யும், எனவே, பொதுநிலையில் அதுவே தந்நலமற்ற வகையில், எல்லாருக்கும் நலமும் இன்பமும் பயனும் தரும்படியான சரியான உணர்வுடையாக இருக்கும். அவ்வுணர்வு வலிவுடையதாகவும் விளங்கும், ஆகவே, அது தோன்றினாரைத் தன்வயப் படுத்தி, அதன் செயற்பாட்டுக்கு அவரை உட்படுத்தி இயங்கச் செய்யும். அவ்வுணர்வு கொண்டவரும், தன்னிலை இழந்து, அத்துலங்கித் தோன்றும் உணர்வுக்குத் தம் மனத்தையும் அறிவையும் ஒப்புக் கொடுத்தவராகி, அவ்வுணர்வு அழுத்தத்தைத் தணித்துக் கொள்ளும் பொருட்டு, அதைச் செயற்படுத்துவதற்குத் தம் உடலையும் அதனடிப்படையான வாழ்வையும் ஈடுபடுத்துவர். இவ்வத்துணை உணர்வு இயக்கத்தையும் சேர்த்தே துலங்குவது முடுக்கல் என்னும் இவ்வுத்தி பிரித்துரைக்கப் பெற்றது என்க.

இனி, உணர்வுதான் எண்ணங்களைச் சமைக்கும் என்பதை-யும், எண்ணங்கள்தாம் அறிவுணர்வால் பிரித்தறியப் பெற்று, நன்று தீது அறிந்து கருத்துகளாக வடிவம் பெற்று, அவை

வலிவு பெற்று, உடலைச் செயலுக்கு உய்க்கும் என்க. எனவே, உணர்வு, எண்ணம், கருத்து, செயல் என்னும் படிநிலை வளர்ச்சி-யானது முறையே நடைபெறுதல் வேண்டும். இவ்வரிசைநிலை வளர்ச்சியில் இடைத்தாக்கம் ஏற்பட்டு, இடைச்சிதர்வு அல்லது இடையழிவு நேர்ந்தால், சில உணர்வுத் தோற்றமாகவே சாம்பி விடவும், சில எண்ண வடிவிலேயே கருகி விடவும், சில கருத்து வடிவம் பெற்று அந்த நிலையிலேயே அழுகி விடவும் நேரும் என்க. அதன் பின்னர் செயல் வடிவம் பெறுவது 'யாங்ஙன்' என்று எண்ணிப் பார்க்கவும்.

துலங்குவது முடுக்கல் என்னும் உத்தியில், 'துலங்குவது' என்னும் சொல்லும், 'முடுக்கல்' என்னும் சொல்லும் மிக முகாமையான நுட்பவுணர்வு கொண்டவை. துலங்குவது தானே துலங்கித் தோன்றுவது; அது செயப்பாட்டு வினை. முடுக்கல்—முடுக்கமாகச் செயல்படுவது; அது செய்வினை. முன்னைய உத்தியில் உள்ள நோற்றன என்பது செய்வினை. நோற்றல் செய்யும் ஒருவர்க்கு அச் செயல் மிக மிக, அடுத்த வாழ்வியல் உணர்வாகிய துலங்குதல் தானே தோன்றும் என்பது இதன் ஆழமான பொருள், அவ்வாறு, தானே துலங்கித் தோன்றும் நிலைக்கு இவர் 'தூக்கி-யதை ஆற்ற' வேண்டும். நாம் ஓர் உணர்வில் உண்மையாகவும் ஆழமாகவும் ஈடுபட ஈடுபட, அடுத்துள்ள வாழ்வியல் உணர்வு தானே நமக்குத் துலங்கித் தோன்றும் என்க. இதைத் திருக்-குறளில் 'ஆள்வினையும் ஆன்ற அறிவும்' என்று குறிப்பால் உணர்த்துவார். ஆள்வினை நடைபெற நடைபெற ஆன்று நின்ற அறிவு துலங்கித் தோன்றும் என்றார். ஆன்ற என்பது உயர்ந்த, சிறந்த, நிறைந்த, மேலான, வலிந்த என்றெல்லாம் பொருள் பட்டாலும், முன்னிருந்த, மறைந்திருந்த என்றும் பொருள் பெறுவதாகும்.

எனவே அறிவு வாழ்க்கையில்தான் துலங்கித் தோன்றுகிற நல்லுணர்வு தோன்றும். அந்த உணர்வுதான் பொதுநிலைக்குப் பயன்படும். அதை அழிக்கவோ தவிர்க்கவோ ஒதுக்கவோ புறக்-கணிக்கவோ அது தலைப்பட்டவர்களால் இயலாது என்க; இயற்கையுணர்வான அத்துலங்கித் தோன்றும் பொதுவுணர்வுக் காட்பட்டு, அத்தொண்டு முடுக்கத்தில் ஈடுபட்டவர்களை எவ்வளவு விலை கொடுத்தும் அந்நிலையினின்று பெயர்த்து விட முடியாது என்பது இதன் பொருட்டாகத்தான் என்க. இவர்கள் உண்மை உணர்வைக் கண்டுணர்ந்தவர்களாகையால் இவர்களே பொதுத் தொண்டுக்கு மிகப் பொருந்தியவர்களாவர்.

இனி, இதற்கும் அடுத்த வாழ்வியல் உத்தியுணர்வு மேற்கொளல் இயற்றல் என்பதாகும். இது, துலங்கித் தோன்றும் பொது உணர்வால், தன் முடுக்கம் கொண்டவர்கள், ஏதாமொரு பொதுவுணர்வுக் கொள்கையினைத் தமக்கென வகுத்துக் கொள்-வார்கள். அக் கொள்கையிலிருந்து, என்றுமே தாம் பிறழாமல் அதற்காகவே தம் முழு வாழ்வியல் முயற்சியையும் ஈடுபடுத்து வார்கள்; அத்தகையவர்களுக்குத் தம் வாழ்வியல் முயற்சிகளை

விடத் தொண்டுக்கெனத் தாம் கொண்ட கொள்கையைச் செயற்படுத்தும் முயற்சிகளே பெரியனவாகத் தோன்றும் என்க.

கொள்கை என்பது மக்கள் வாழ்வியல், உரிமையியல், பொதுமையியல், பொருளுடைமைப் பகிர்வு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டதாக இருத்தல் வேண்டும். சாதி, மத, வேறுபாடுகளைக் களைந்து, மக்களெல்லாம் சமமென நினைக்கத் தகும் பொதுவுணர்வுகளை வளர்த்தெடுக்கும் வகையில் கருத்துப் பரப்பல்களும் செயலுணர்வுத் திட்டங்களும் கொண்ட பொதுநலக் கொள்கைகளே மக்களுக்கு வேண்டுவனவாகும். இக்கொள்கைகளுக்காகத் தாங்கள் தங்கள் வாழ்வியல் நலன்களைப் பெரிதாகக் கருதாமல், செயல்களைப் பல வகையாகவும் திட்டமிட்டுச் செய்தலையே இயற்றல் என்கிறோம்.

இத்தகைய ஏழாம்நிலை உத்தியுணர்வு கொண்டவர்களே இப் பொதுநலத் தொண்டுக்கு முழுவதும் பொருந்தியவர்கள் ஆவர். என்ன துயர்வரினும், இடர்ப்பாடுகள் சூழினும், தடைகள் ஏற்படினும் தாங்கள் கொண்ட கொள்கைகளுக்காகவே அவற்றை விளைவிப்பதிலேயே துணிவும் வேகமும் கொண்டவர்கள் இவர்கள். தமக்கெனத் தனிநிலை வாழ்வு ஒன்று இருப்பதாகவே இவர்கள் நினையார். தங்கள் வாழ்வும் பொது நிலையோடு ஒன்று கலந்துள்ளதாகவே இவர்கள் கருதுவர். தந்நலம் என்பதையே பொதுநலமாக மாற்றிக் கொண்டவர்கள், இவர்கள்.

இவர்கள் எவரையும் எதிர்க்கும் துணிவுள்ளவர்கள்; தங்களுக்கென எவரையும் எதையும் வேண்டி நாடிப் போகாத மனவுறுதி உள்ளவர்கள்; தன்மானம் கொண்டவர்கள். இவர்கள், தாங்கள் மேற்கொண்ட கொள்கைக்காக எந்நிலையிலும் எவரிடமும் போராடும் போர்க்குணமும், நேர்மையும், உண்மையும், விடாமுயற்சியும், பொது வொழுக்கமும் கொண்ட தன்மையுடையவர்கள், அதனால் அச்சம் நீங்கியவர்கள். அக்கொள்கைக்காகப் போராடும் பொழுது முன்வரும் எத்தகைய எதிர்விளைவுகளையும் சந்திக்கின்ற மனத்திட்பமும், மனவுறுதியும் கொண்ட செயல் மறவர்கள், இவர்கள்;

இருப்பினும், இவர்களின் பொதுநல முயற்சி ஒரு தொடர்நிலை முயற்சியாக இருக்கும் பொழுது, பல்வேறான எதிர்நிலைத் தாக்கங்களையும் இவர்களுள் சிலரால் தொடர்ந்து தாக்குப் பிடிக்க முடியாத ஒரு நிலை தோன்றலாம். அக்கால் இவர்கள் மனத்தொய்வும் வினைத்தொய்வும் கொண்டு தன்னிலை யிழந்து, துன்புற்று அயர்ந்து நின்று விடுவர். ஆனால் அவ்விடத்தும் தாம் கொண்ட கொள்கை உரத்தில் ஓர் இம்மியும் தாழ்ந்துவிட மாட்டார்கள். இவர்கள். எனவே, இவர்களுள் மிகச் சிலர் இவர்களினும் கொண்ட கொண்ட கொள்கையினும் உறுதிப்பாடு உடையவர்களாக ஆகி மிகவும் மேம்பட்டு விளங்கி நிற்பர்; அத்தகையோரே 'மீறி அது செய்தல்' என்னும் எட்டாவது உத்திநிலைக்குப் பொருந்தியவர்களாக இருப்பர்.

கொண்ட கொள்கையைச் செயல்படுத்துகின்ற நன்முயற்சி உடையவர்கள், எதிர்வருகின்ற எதிர்ப்புகளையும் துன்பங்களையும் தாளாமல்-தாக்குப் பிடிக்க இயலாமல்-தம் கொள்கை முயற்சிகளினின்று அஞ்சி விலகி விடுவதே இயல்பாக இருக்கிறது. அத்தடைகளை மீறிக்கொண்டு, தம்மை நிலை நிறுத்தித் தம் கொள்கை நோக்குக்குச் செயல்படும் மீறி அது செய்தல் என்னும் உத்தியைக் கொண்டவர்கள் உலகில் மிக மிகக் குறைவானவர்களே! ஆனால் இவர்கள்தாம் மக்களுக்கு ஏதாவது செய்பவர்களாக இருக்கிறார்கள்; இருந்திருக்கிறார்கள். சாக்ரடீசு, புத்தர், ஏசு, காந்தி, பெரியார் முதலிய மக்கள் நலத்திற்கென்றே தங்கள் வாழ்நாள் முழுவதையும் ஒப்படைத்துத் தங்கள் தனி வாழ்வையே இழந்தவர்கள் அவர்கள்; நம்மில் பெரும்பாலார் இவர்களைப் போல் பொது வாழ்வில் ஈடுபடாமைக்கு முகாமையாகக் கூறும் காரணம் 'எல்லாருமே புத்தர், ஏசு, பெரியார் போல் ஆகிவிடமுடியுமா' என்பதே; 'ஏன் ஆக முடியாது? அவர்களும் நம்மைப்போல் இருந்துதானே, இந்த மக்கள் குலத்துக்கென்று உழைத்தார்கள்' என்று நாம் நினைத்துப் பார்ப்பதில்லை.

நம் தந்நல உணர்வால் நம் வாழ்க்கை நலன்களை மட்டுமே கவனித்து, எதிர்பார்த்து வாழும் ஊர்வன, பறப்பன, கால்நடைகள் போலும், நம்மை நாம் எண்ணி வாழ்வதாலேயே, அவர்களைப் போல் நாம் பெருமை பெறமுடிவதில்லை. அவர்களைப் போல் பொதுமை உணர்வு நம்மிடம் இல்லை; ஓர் உயர்ந்த நோக்கம் இருப்பதில்லை; இதைச் செய்து முடிக்கவேண்டும் என்னும் நோன்பு நமக்கில்லை. தூக்கியதைச் செய்யும் ஆற்றல் இல்லை; முடுக்கிய செயற்பாடு இல்லை; எந்த நிலையிலும் துணிகின்ற—துணிந்ததை இயற்றுகின்ற—முனைப்பும் மீமிசை மாந்தத் தன்மையும் நமக்கு இருப்பதில்லை. நம்மில் சிலர் பாம்பைப்போல் சீறுகிறோம். எங்காவது நம் தலையின்மீது ஒரே ஒரு சிறு தட்டு விழுந்தவுடன் படத்தைச் சுருக்கிக் கொண்டு பெட்டிப் பாம்பாய் அடங்கிவிடுகிறோம். எதிர் வருகின்ற இடையூறுகள், இடர்ப்பாடுகள், எதிர்ப்புகள், இழிவுகள், துன்பங்கள் இவற்றையெல்லாம் மீறிக் கொண்டு மக்களுக்கு நலஞ் செய்கின்ற கொள்கையில் தொடர்ந்து செயல்படாமல் தொய்ந்து போகின்றோம்; சோர்ந்து விடுகின்றோம்.

தமிழினத்தவர்களுக்கு மீறிச் செய்தல் உணர்வு கட்டாயம் ஏற்படுதல் வேண்டும். இவர்களுள் ஆயிரத்துக்கு 45 பேர் போக்கின் போதல் உணர்வுள்ளவர்கள்; 30 பேர் பொதுவெனப் படுதல் என்னும் உணர்வினர்; 10 பேர் நோக்கின் இயங்குபவர்கள்; 5 பேரே நோற்றன செய்பவர்கள்: தூக்கியதாற்றுபவர் 4 பேர்; துலங்குவது முடுக்கல் உணர்வுள்ளவர்கள் 3 பேர். மேற்கொளல் இயற்றல் என்னும் உணர்வினைப் பெற்றவர்கள் 2 பேர். ஆக ஆயிரத்தில் ஒருவராயினும் மீறிச் செய்தல் என்னும் உணர்வுடையவர்களாக இருப்பின், இந்த இனம் படிப்படியாகவேனும் முன்னேறிவிடும்! ஆனால் அவ்வாறும் இல்லையே! என் செய்வது? ○

Scanned with CamScanner

# பாரதி வளர்த்தது பார்ப்பனீயமே

தஞ்சை வெற்றிமணி

இம்மண்ணைத் தவிர உலகெங்கிலும் பொருளியல் நிலையே ஒருவனின் குமுகாய நிலையை உறுதிப்படுத்துகிறது. எனவே அங்கெல்லாம் பொருளியல் சுரண்டல்காரனும் குமுகாயச் சுரண்டல்காரனும் ஒன்றாகவே உளர். இந்நிலைக்கு மாறாக, இம்மண்ணில் மட்டுமே 'பிறப்பின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்படும் சாதியின் அடிப்படையில்' குமுகாய நிலை உறுதிப்படுத்தப்படுகிறது. மற்ற மண்ணில் பொருளியல் சுரண்டலும் குமுகாயச் சுரண்டலும் ஒன்றாகவே நடைபெற்று வந்திருக்கின்றன. இம்மண்ணில் மட்டுமே குமுகாயச் சுரண்டல்காரர்கள் பொருளியல் நிலையைவிட, பிறப்பாலேயே குமுகாயச் சுரண்டலை உறுதிப்படுத்திப், பின் பொருளியல் சுரண்டலுக்கு இக் குமுகாயச் சுரண்டலை வலுமிக்க அரணாக அமைத்துக் கொள்கின்றனர்.

மேற்சொன்ன நிலையை முற்றிலும் திரித்துப் பாரதி பின் வரும் கருத்தை வெளியிடுகிறார்.

"ஆனால் நமக்குள் ஜாதி பேதம் இருக்கிறதே என்றால், ஜாதி பேதம் இந்தியாவில் மட்டுமல்ல. உலகத்தில் எல்லா தேசங்களிலும் இருக்கிறது. இந்தியாவில் கொஞ்சம் தீவிரமாகவும், விநோதமாகவும், மாற்றுவது கஷ்டமாகவும் இருக்கிறது."

—பக் : 92. பாரதி புதையல் 2-ஆம் பாகம்.

இந்தியாவில் மட்டுமே இருக்கிற தனித் தன்மையான சாதி வேறுபாட்டை உலகப் பொதுமையாக்கி, அதன் சாரத்தைக் குறைக்க முயல்கிறார், பாரதி. விலங்கைவிட இழிவாக மாந்தரை மதிக்கும் சாதிக் கொடுமை இம்மண்ணில் மட்டுந்தான் உண்டு. ஆனால் பாரதியின் கண்களுக்கு இது தெரியவில்லை, எனவே, உருசியப் புரட்சி போன்ற ஒன்று இந்தியாவில் வெடிக்காததற்கு அவர் கூறும் 'முதல் காரணம், ஹிந்து ஜன சமூக அமைப்பில் ஐரோப்பாவில் இருப்பது போலவே அத்தனை அதிகமான தாரதம்மியம் இல்லை' என 28, நவ, 1917-இல் 'செல்வம்' என்ற தலைப்பின் கீழ் எழுதுகிறார்.

இத்தகைய பார்ப்பனச் சார்பு அடிப்படையில்தான், "தீபாவளி ஓர் ஜாதிய மஹோத்ஸவ ஹிதினம். இதை நாம் கொண்டாட வேண்டியது மெத்த அவசியமே" (ப. 73. பா. பு. 2) என்று பாரதி சொல்கிறார்.

வெள்ளையர் இந்நாட்டை ஆண்டபோது, திலக்ர் என்ற பார்ப்பனத் தலைவர் வாழ்ந்த காலக் கட்டத்தில் கடும் பிளேக் தொத்து நோய் நாட்டைச் சீரழித்தது. எலிகளின் மூலம் இந்நோய் நச்சுயிரிகள் பரவியதனை அறிந்து எலிகளைப் பெருமளவில் கொல்லும் முயற்சியில் அரசு துணிந்தது. அப்பொழுது, 'விநாய-

Scanned with CamScanner

கரின் வாகனமே எலி' என்று சொல்லி, மக்களைத் தூண்டி, அரசின் தொத்து நோய் ஒழிப்பு நடவடிக்கையை எதிர்த்துப் போராட்டங்கள் நடத்தியவர் திலகர். இப்போராட்டங்களின் எலிகளைக் கொல்லச் சென்ற மூடுந்து (Van) கொளுத்தப்பட்டு, எலி ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட இரு வெள்ளையர்கள் கொல்லப்பட்டனர். இதற்காக 18 மாதங்கள் சிறையிருந்த ஈகியே திலகர். (பக். 61. From curzan io Nehru and Others — By Durga Das)- பார்ப்பனியத்தைத் தகர்க்க வெள்ளையர் எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராகப் பார்ப்பனியத்தைக் காக்க நடந்த போராட்டங்களை, விடுதலைப் போராட்டங்களாக வருணித்தது ஒரு பார்ப்பன சூழ்ச்சியே ஆகும். அத்தகைய பார்ப்பனியப் பாதுகாப்புப் போராட்டங்களை நடத்தியவர்கள் தேசியத் தலைவர்களானார்கள்.

இதன் அடிப்படையில் பாரதிக்குத் தலைகால் புரியாத தேசியப் பித்து இருந்ததில் வியப்பில்லை. எனவேதான், 'திலகர் தனது தேசத்தில் பிறந்த கடமையை முடிக்க ஸத்புத்திரராய், தாழ்ந்திருக்கும் ஜனங்களுக்குப் போதித்து உலகம் இன்ன தென்பதையும், தற்காலச் செய்கைகள் இன்னின்ன வென்பதையும், நன்றாய் எடுத்துக்கூறி நல்வழிப்படுத்துகிறார்' என, சன 5, 1907, 'இந்தியா' இதழிலும், 'உண்மையான தேசாபிமானத்தில் ஸ்ரீதிலகருக்கு மேலான இந்தியன் இவ்விந்தியாவிலுமில்லை; இவ்வுலகத்திலுமில்லை என்பது எம் அபிப்பிராயம்.' என, சன 12, 1907 அதே 'இந்தியா' இதழிலும் பாரதி எழுதினார்.

பார்ப்பனப் பற்றே தேசப்பற்றாகத் திரிக்கப்பட்டதால், வலியால் துடித்த, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த பிள்ளைத்தாய்ச்சியை, அவ்வழிச் சென்ற ஆஷ் எனும் வெள்ளையரான மாவட்ட ஆட்சித் தலைவர், தமது அழகிய குதிரை வண்டியில் ஏற்றி, விரைவு காரணமாகப் பார்ப்பனர் வாழ்ந்த அக்கிரகாரம் வழியே செல்ல, 'தாழ்த்தப்பட்ட இனப் பெண்ணை அக்கிரகாரம் வழிக் கொண்டு சென்ற குற்றத்திற்காக அவரைக் கொன்ற 'வாஞ்சி' என்ற பார்ப்பன இளைஞன் தேசிய ஈகி (தியாகி)யானான்.

எனவே, பாரதி பலருக்குப் புரட்சிப் பாவலனாகவும் தேசியப் பாவலனாகவும் தென்படுவதில் வியப்பில்லை. வருண, சாதி வேறுபாடுகள் இருக்கவேண்டும் என்பதில் அக்கறை காட்டுகிறார் பாரதி என்பதைப் பின்வரும் உரையைக் கண்டு தெளியுங்கள்.

''ஸநாதன தர்மத்திலேயே இருக்கும் பலவித கட்சிகளும், வகுப்புகளும், கிளைகளும், சூரிய ஜோதியிலே காணப்படும் ஏழுவகை வர்ணங்களைப் போலவே அவசியத் தன்மை கொண்ட அலங்காரங்களாகுமேயல்லாமல், குறுகிய நோக்கமுடைய சிலர் நினைப்பதுபோல் நமது அழிவுக்குக் கருவிகளாக மாட்டா'' பக். 180 : பா. பு: உ:). சனாதன தாமத்தைப் பற்றி இவ்வளவு ஆதரவாகப் பாரதி சொன்ன பின்னும் பாரதியைச் சாதி எதிர்ப்பாளராகக் கொள்ள முடியுமா?

Scanned with CamScanner

பாரதியை அதிகமாகத் திறனாய்வு செய்வோர்கள் பாரதி-யிடம் முரண்பாடுகள் இருந்தன என்ற அளவோடு நிறுத்திக் கொள்வர். மாறாக அம் முரண்பாடுகள் தோற்ற முரண்பாடு-களே! உண்மையில் அவை பார்ப்பனிய-பணக்கார ஆற்றல்களை வளர்க்கும் உரங்களாகவே அமைந்தன என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள்.

'சாதிகள் இல்லையடி' என்று பாடிய பாரதி மறந்தும் மனுதர்ம நூலையும், அதன் வழி அமைந்த இராமாயணத்தையும் கண்டிக்கவில்லை. மாறாக சூத்திரனைத் தேவடியாள் மகனாக உறுதி செய்த இராம இராச்சியத்தைப் புகழ்கிறார். சாய்க்கடையைப் பாதுகாத்துக் கொண்டே, போற்றிக் கொண்டே, கொசுக்களின் தொல்லைகளுக்காக முதலைக் கண்ணீர் வடித்துச் சாய்க்கடையை அழிக்க முற்படும் ஆற்றலைத் திசை திருப்பிச் சாய்க்கடையைப் பாதுகாக்கும் பணியே பாரதியின் தோற்ற முரண்பாடுகளின் அடித்தளமாகும். 'சாதி எதிர்ப்பாளர்' பலரை 'இராமாயண அன்பர்'களாக மாற்றிய பெருமை பாரதிக்கு உண்டு.

'சாஸ்திரங்கள் வேண்டா,
சதுர் மறைக ளேது மில்லை;
தோத்திரங்கள் இல்லை, உளந்
தொட்டு நின்றாற் போதுமடா'

—என்று மாயையைப் பழித்துப் பாடிய அதே பாரதி,

'சதுர்வேதங்க ளாயிர முறை படித்தால்
மூளுநற் புண்ணியந்தான் வந்து மொய்த்திடும்'

—என்று 'கோமதி மவுனத்'தில் பாடுகிறார். 'சாதாரண வேதம்' என்றால் வேறு பொருள் காட்டி விடுவார்கள், பாரதி போதை-யாளர்கள் என்பதால், 'சதுர் வேதங்கள்' என்று தெளிவாகக் குறிப்பிடுகிறார், பாரதி.

வேதங்கள் கோத்து வைத்தான்-அந்த
வேதங்கள் மனிதர்தம் மொழியில் இல்லை.
வேதங்கள் என்று புவியோர்—சொல்லும்.
வெறுங்கதைத் திரளில் அவ் வேதம் இல்லை.
வேதங்கள் என்றவற்றுள்ளே-அவன்
வேதத்திற் சில சில கலந்ததுண்டு!
வேதங்கள் அன்றி ஒன்றில்லை-இந்த
மேதினி மாந்தர் சொலும் வார்த்தைகள் எல்லாம்!

—"என்ற பாடல் அடிகளைப் படித்தால் பாரதி சொல்லும் வேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அதவர்ணம் என்று பொது-வாகச் சொல்லப் படுகின்ற நான்கு வேதங்கள் அல்ல என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும்'' என்கிறார், சீவா; இவர், கோமதி மவுனத்தில் வரும் சதுர் வேதங்களைப் படித்த தில்லை போலும்;

ஆரியம் இறைவன் மொழி என்பது பார்ப்பனர் கருத்து. எனவே மாந்தர் மொழியாம் தமிழ் மற்றும் இலத்தீன், உருது போன்ற வேறு மொழிகளில் உள்ள வேதங்களில் வேதம் இல்லை என்பதே பாரதி கருத்து. மேலும் 'வேதங்கள் அன்றி ஒன்றில்லை' என்பது சதுர் (நான்கு) வேதங்களையே குறிக்கும் என்பதனை இது வரை வந்த, இனியும் வரவிருக்கும் சான்றுகள் புலப்படுத்தும்.

'மெய்ம்மை கொண்ட நூலையே அன்போடு
வேதம் என்று போற்றுவாய் வா, வா, வா!'

என்ற பாடலை தம் கருத்துக்குத் துணை சேர்க்கிறார் சீவா. இன்றைக்கும் முகமதியம் கிறித்துவம் உள்ளிட்ட ஒவ்வொரு மதக்காரரும் மேற்சொன்ன வரையறையையே தத்தம் வேதத்திற்குக் கொடுத்துக் கருத்துப்பரப்பல் செய்கிறார்கள்.

'வேதம்' பற்றிப் பாரதிக்குப் பார்ப்பன நோக்கே இருந்தது என்பதனைப் பின்வரும் உரை தெளிவுபடுத்துகிறது.

"எனவே பிரகலாதனைப் போன்ற தெய்வபத்தியும், மன்மதனைப் போன்ற ஏக பத்தினி விரதமும் ஒருவன் கைக் கொண்டிருப்பானாயின் அவன் இந்த உலகத்திலேயே ஜீவன் முக்தியடைந்து எல்லா அம்சங்களிலும் தேவ பதவி எய்தியவனாய் எப்போதும் மகிழ்ச்சி கொண்டிருப்பான்"

—ப : 23. பா; பு. 3.

'எங்கள் நாடு' என்ற தலைப்பில்,

"பன்னரும் உபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேது ஒரு நூல் இது போலே"

—என்று பாரதி பாடுகிறார். இதன் வழியில்தான் 'வேதம் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே' என்றும் பாடுகிறார், பாரதி!

அன்னையே, அந்நாளில் அவனிக் கெல்லாம்
ஆணி முத்து போன்ற பணி மொழிக ளாலே
பன்னிநீ வேதங்கள் உபநிடதங்கள்
பரவு புகழ் புராணங்கள் இதிகாசங்கள்
இன்னும் பல நூல்களிலே இசைத்த ஞானம்
என்னென்று புகழ்ந்துரைப்போம் அதனை இந்நாள்?
ஓதுமினோ வேதங்கள்! ஓங்குமினோ! ஓங்குமினோ!

—பாரத மாதா நவரத்தன மாலை.

"ஸ்த்ருசோ மதனுவஸம்
ப்ஸ்யன் ய: ப்ரஜபேன் மனும்:
அயுதம் ஸோ கிரா தேவ
வாக பதே: ஸமதா மியாத்"

பொருள்: ஓர் அழகிய பெண்ணின் குறியைப் பார்த்துக் கொண்டு பத்தாயிரம் மந்திர ஜெபம் பண்ணுகிறவன் தேவகுருவுக்குச் சமமானவன்.

பக்: 100, 'ஞானசூரியன்;

''தூரமான பெண்ணின் இரத்தத்தோடு கூடிய பெண்குறி-யைத் தியானித்துக் கொண்டு, பதினாயிரம் உரு ஜெபிக்கிறவன் மதுரமான செய்யுட்களால் உலகத்தை மயக்குவான்''

—பக்: 101, ஞானசூரியன்;

(பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு. விலை ரூ 2. (சமசுக்கிருத மேற்கோளோடு இது போன்ற பல சான்றுகள் இப்பொத்தகத்தில் உள.)

'இசைத்த ஞானம் என்னென்று புகழ்ந்துரைப்போம்" என்று பாரதி பாராட்டிய நூல்களில் உள்ளவை பற்றிய உண்மைகளை மேலே கோடிட்டுக் காட்டினோம்; இவற்றையெல்லாம் 'ஓதுமினோ! ஓங்குமினோ! ஓங்குமினோ! 'என்று செயல்படுத்தத் துவங்கினால் என்ன ஆகும்? புரியாமல் பாடினாரா? புரிந்துதான் பாடினாரா? ஒருவேளை பார்ப்பன வெறி தலைக்கு ஏறியதால் புரிந்தும் புரியாமல் பாடினாரோ? இதே நோக்கில்தான் பின்வரும் பாடலும் அமைகிறது,

மந்திரங்களைச் சோதனை செய்தால்
வையகத்தினை ஆள்வது தெய்வம்
அந்த தெய்வம் கதியென் றிருப்பீர்
ஆக்கமுண் டென்றனைத்து முரைக்கும்'

—பக். 79; பாரதி நினைவுகள்,-யதுகிரி அம்மாள்

இம் மந்திரங்களை ஆய்வு செய்வோர் பெறக்கூடிய சிலவே 'ஞானசூரியன்' புத்தகமாக வெளிவந்துள்ளன.

சதுர் வேதங்களை, புராணங்களை, உபநிடதங்களைப் புகழ்ந்து பாரதி நிறையப் பாடியுள்ளார்-பாரதியின் பார்ப்பனத் தன்மை-யைப் பின்வரும் உரை உறுதிப் படுத்துகிறது;

''நாம் இவ்வுலகில் நிலைத்திருக்க வேண்டுமானால், நம்முடைய மதங்களையும், மடாதிபதிகளையும், தேவாலயங்களையும், எப்-பொழுதும்போல் திரிகரண சுத்தியோடு நம்மால் இயன்ற மட்டிலும் ஆதரித்து வர வேண்டும்; பக்: 61. பா. டி; 3)

'சாதிக் கொடுமை' எனும் கொசுத் தொல்லைக்கு முதலைக் கண்ணீர் வடித்து வருணாசிரம சாய்க்கடையைப் பாதுகாக்கும் பாரதியின் பணியினைப் பின்வரும் உரை தெளிவு படுத்துகிறது;

''இந்து நாகரிகம் என்றவுடனே நாம் தற்காலத்தில் அடைந்-திருக்கும் நிலைமையை நினைத்துக் கொள்ளல் ஆகாது: மாங்கனியே இதுவரை கண்டிராத ஒருவன், கீழே விழுந்து அழுகி, நாற்ற-மெடுத்துப் போயிருக்கும் ஒரு மாங்கனியைத் தின்று ருசி பார்த்து விட்டு மாமரத்தின் பழங்களே பொதுவாக இவ்வாறுதான் இருக்கும் என்று நிச்சயித்துக் கொள்ளுதல் எவ்வளவு பெரும் பிழையாகும், அதுபோல ஹிந்து நாகரிகம் சிதைந்து, சீர்குலைந்து போயிருக்கும் இக்காலத்தில் அதைப் பார்த்து விட்டு அதன் இயற்கையே இவ்வாறு தானாகுமென்று நிச்சயிப்பது பெரிய

தவறாகும். நமது புராதனக் கலைகள், காவியங்கள், இதிகாசங்கள், சரித்திரங்கள், புராணங்கள், ஸ்மிருதிகள், சாஸ்திரங்கள் தொழில் வகைகள், கோயில்கள், ஸ்தாபனங்கள், சிலைகள், வடிவுகள்-இவற்றையெல்லாம் ஆழ ஆராய்ந்து அவற்றில் பிற்காலத்தில் சேர்ந்திருக்கும் மாசுகளையெல்லாம் அறிவு வாளினால் நன்கு தேய்த்து அகற்றி விட்டு, பின்பு பார்த்தால் ஆர்ய ஸம்பத்தின் இயல்பு தெரியும்.'' என்றும், 'முன் ஒரு காலத்தில் நம்முடைய இந்து தேசமும் உயர்ந்த நாகரிகம் அடைந்து நிகரில்லாததாய் இருந்தது'' (பக். 72; பா. பு. 2) என்றும் பாரதி சொல்கிறார்.

நமக்கு எழுகின்ற ஐயம் இதுதான். இந்து நாகரிகம் முழுமையாக இருந்த கால கட்டத்தில் தாழ்த்தப்பட்டவன் கோவிலுக்குள் நுழைய முடியாமல்தானே இருந்தான், பார்ப்பனச் சேரியில் சூத்திரன் வேலைக்காரனாக மட்டுந்தானே போக முடிந்தது.

''உலகம் கடவுளுக்குட் பட்டது; கடவுள் மந்திரத்திற்குட் பட்டது; மந்திரம் பார்ப்பானுக்குட் பட்டது; எனவே. பார்ப்பானே கடவுள்''-என்றவாறு பார்ப்பானுக்கு நலமான பார்ப்பன நாடுதானே உண்மையான இந்து நாடாக இருந்தது. இச்சாதி அமைப்பினையே தகர்த்து எழுந்த போர்ராட்டங்களின் விளைவால் தாழ்த்தப் பட்டவர் கோவிலுக்குள் செல்லமுடிந்தது; சூத்திரனுக்குக் கல்வி பெற வாய்ப்பு ஏற்பட்டது.1981இலும் பார்ப்பான் மட்டுமே அமைச்சராக முடியும்? கிருபானந்த வாரியாரே கோவில் கருவறையில் நுழைந்தால் தீட்டாகி விடுமே!

'தமிழில் வழிபட்டால் கடவுள் சிலை ஆற்றல் இழந்துவிடும்; தமிழில் வழிபட்டால் கடவுள் சிலைக்கு ஏற்படும் தீட்டைக் கழிக்கவும், தண்டமும் சேர்த்துத் தண்டப்படும்' என்று இந்து நாளிதழில் பார்ப்பனர்கள் வெளிப்படையாக மடல்கள் எழுதியுள்ளனர்.

ஆக, இந்து நாகரிகம் சிதைந்து சீர்குலைந்து போயிருக்கும். இந்த நிலையிலேயே, பார்ப்பனரின் நடைமுறை இப்படி என்றால் உயர்ந்திருந்தபோது எப்படி இருந்திருக்கும்?

சேதமில்லாத ஹிந்துஸ்தானம்—அதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா''

—என்பது எவ்வளவு பெரிய அரம்ப (அயோக்கிய)த்தனம்' தம்முடைய 'சுயசரிதை'யில் தந்தை வறுமை எய்தியதைப் பற்றி வரைகையில்,

''பார்ப்பனக் குலங் கெட்டழி வெய்திய
பாழடைந்த கலியுக மாதலால்''

—என்று சொல்லி முன்னைய பார்ப்பனர் நிலை இன்று இல்லையே என ஏங்குகிறார் பாரதி.

அடுத்து மிகவும் வேடிக்கையானது இங்கு பொதுவுடைமையர்கள் (கம்யூனிஸ்டுகள்) என்று தம்மை வெளிப்படுத்திக் (பிரகடனப் படுத்திக்) கொள்பவர்கள் பாரதியைப் புகழ்வது தான்!

'மாகாளி பராசக்தி உருஷ்ய நாட்
டினிற் கடைக்கண் வைத்தாள்; அங்கே
ஆகாவென் றெழுந்தது பார் யுகப் புரட்சி!
செம்மை யெலாம் பாழாகி கொடுமையே
அறமாகித் தீர்த்தபோதில்,
அம்மை மனங் கனிந்திட்டாள் அடிபரவி
உண்மை சொலும் அடியார்தனம்
மும்மையிலும் காத்திடு நல் விழியாலே,
நோக்கினுள் முடித்தான் காலன். —'புதிய ருஷ்யா'

மாகாளி பராசக்தியைத் தெய்வமாக வழிபடுவது இம் மண்ணில்தான். ஆனால், அவளுடைய கடைக்கண் பார்வையோ இம்மண்ணில் விழாமல் உருசிய மண்ணில் விழுந்ததாம்; அங்குக் காளியின் காதலர் கடவுள் இருக்கிறாரோ என்னவோ? காளியின் கடைக்கண் பார்வை பட்டதுதான் பட்டது, உலகம் முழுவதும் பட்டிருந்தால் உலகம் முழுவதும் பொதுவுடைமை மலர்ந்திருக்குமே! காளிக்கு என்ன ஒன்றரைக் கண் பார்வையா? அல்லது உலகம் முழுதும் ஒரே நேரத்தில் பார்க்க முடியாத அளவுக்கு வலுவற்ற கண்களா காளியின் கண்கள்?

இதைவிட வெட்கக்கேடு என்னவென்றால், "செம்மையெலாம் பாழாகிக், கொடுமையே அறமாகித், தீர்த்த போதில்... அம்மை மனங் கனிந்திட்டாள்... முடித்தான் காலன்" என்று கூறியிருப்பதாகும். விலங்குகளைவிட இழிவாக மக்கள் குமுகாய நோக்கில் நசுக்கப்பட்டுப், பொருளியல் நோக்கில் சுரண்டப்பட்டு வாழ்ந்த, வாழ்கின்ற இம்மண்ணைவிடக் கீழான நிலையா உருசிய மண்ணில்? ஆக, காளியின் 'கடைக்கண் பார்வை' படவேண்டுமானால், நிலைமை இன்னும் கீழாகத்தானே ஆகவேண்டும்? இதைவிட இழிவு என்னவென்றால், இறை மறுப்பு (நாத்திக)க் கொள்கையை ஏற்றுக் கொண்டு, மாந்த ஆற்றலைப் பயன்படுத்தி உருசியாவில் வென்ற பொதுவுடைமைப் புரட்சியின் வெற்றியை 'மாகாளி பராசக்தி' என (ஆத்திக) இறைக் கொள்கை வண்ணம் பூசி இழிவு படுத்துவதை உணராமல், 'ஆகா பாரதி உருசியப் புரட்சியைப் பாராட்டி விட்டான்' என்று தலைகால் புரியாமல் பொதுவுடைமைகள் (கம்யூனிஸ்டுகள்) குதிப்பதுதான்! எதை, யார், எந்த நோக்கில் பாராட்டுகிறார்கள் என்று ஆராயாமல் 'பாராட்டு' என்றவுடனேயே மகிழ்வது அறிவுடைமையா?

(தொடரும்)

---

உறுப்பினர்களைச் சேர்த்து உதவுங்கள்!

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்களை நிறுத்த வேண்டாம் என்று எழுதும் அன்பர்கள் ஒவ்வொருவரும் பத்து உறுப்பினர்களைச் சேர்ப்பது என்று உறுதி பூண்டுவிட்டால் எவ்வளவு பயனுடையதாக இருக்கும்! எண்ணிப் பாருங்கள்; செயல்படுங்கள்!

Scanned with CamScanner

நாடகம்: 

# வழக்குரை காதை!

(மூலம்: பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியக் கொத்து.)

(நாடக ஆக்கம்- அதியமான்)

(நடுவரின் அதிகாரச் செருக்கைக் கேட்டு மக்கள் கூட்டத்தில் கூச்சல் குழப்பம். மக்கள் தலைவன் பேசுகிறான்; கூட்டத்தைக் கலைக்க காவலர் அடிக்கின்றனர்.)

மக்-தலை: (கூட்டத்தைப் பார்த்து) அமைதியாக இருங்கள். பொறுமைக்கு இலக்கணம் சொன்னமரபு, தமிழ்மரபு. இந்திய விடுதலைக்குத் தமிழர்களும் போராடி வாங்கிய உரிமையைத் தங்களுக்கே என எண்ணி நன்றி மறந்தனர். தாய்மொழி தமிழே, தமிழர்களுக்கு உயிர். இந்தி கொண்டு தமிழை அழிக்க எண்ணுகின்றனர். அரை நூற்றாண்டுகளாய் இந்தி வேண்டாம் எனக் கூறும் தமிழர் உணர்ச்சிகளை, மதிக்காத இந்தி வெறியர், நம் இனத்தையே இலங்கையில் அழிக்கின்றனர். இனி இவர்களோடு ஒத்து வாழமுடியாது. தமிழ்நாடு பிரியத்தான் வேண்டும். வேல்மார்பனின் பேச்சால் நாம் உணர்ச்சி பெறுவோம் என்று நினைத்து, அவனை ஒழித்துக்கட்ட திட்டம் போட்டுச் செயல்படுகின்றனர். உளவியல் பார்வையற்ற இந்திய அரசு நம்மை அடக்கிடப் பார்க்கிறது. அவர்களுக்குக் கால்பிடிக்கும் தமிழ இரண்டகர்களை வீழ்த்தித் 'தமிழ்நாடு நம்நாடு' என்று கூறுவோம். வேல்மார்பனைத் தீர்த்தால், முடிந்துவிடும் என்ற தப்பான எண்ணம் வீழ நாளை அனைவரும் மீண்டும் இங்கே வருவோம்.

(காவலர் கூட்டத்திற்குள் இறங்கி அடித்துக் கலைக்கின்றனர்.)

கூட்-தலை: (அடி வாங்கிக் கொண்டே) தமிழ்,

மக்-கூட்: வாழ்க!

கூட்-தலை: வேல்மார்பன்,

மக்-கூட்: வாழ்க!

(கூட்டம் கலைந்து செல்லுகிறது.) (திரை)

உறுப்பினர்: வேல்மார்பன், நடுவர், அரசு வழக்குரைஞர், காவல் ஆய்வர், இருகாவலர், மக்கள் கூட்டம்.

காலம்: காலை 10 மணி

இடம்: வழக்குமன்றம்.

Scanned with CamScanner

காவ-ஆய்; } : (வேல்மார்பனைத் தொடரி(சங்கிலி)யால்
காவ-இருவர் } பிணைத்துக் கட்டி இழுத்து வருகிறார்கள்.
வேல்மார்பனின் உடல் காயமுற்று அரத்தம் தெரிகிறது.
குற்றக் கூண்டில் நிறுத்துகின்றனர்.)

அ.வ.உ.: வேல்மார்பனே! இந்தியா நமது ஒரே நாடு. காசுமீரம் தொட்டுக் கன்னியாகுமரி வரை பாரதநாடு பழம் பெரும் நாடு. இதில் வாழும் நாமெல்லாம் ஒரே இனம் இந்தியர். இப்படி இருக்க நீ தமிழர்கள் என்று ஓர் இனம் உண்டு எனக் கூறியது குற்றம். தமிழ்தான் எம்மொழிக்கும் மூலம் என்று சொன்னதும் குற்றமே. இந்தியை அயலான்மொழி என்று பேசியதும் குற்றம். சட்டபடி இந்தி ஆட்சிமொழி. அதை நீ மதிக்காதது சட்டபடி மன்னிக்கமுடியாத குற்றம். உறங்கும் மக்களை உசுப்பியது பெருங்குற்றம். அவர்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டியது, உன்னை ஒறுக்கும் (தண்டிக்க) குற்றம். நீ உரிமை உரிமை என்று தெருத்தெருவாய் பேசினு-யாமே, எந்த உரிமையை நீ இழந்துவிட்டாய், சொல் பார்ப்-போம்.

வே.மா.: மூச்சுவிடாமல் பேசித் தீர்த்துவிட்டீர்கள். உரிமையை நான் மட்டுமா, இழந்தேன். நீங்களுந்தாம்! என் உயிரை எடுக்கப்போகிறீர்கள். எனவே என் கருத்தைச் சொல்லிவிடு-கிறேன். அறவோரே, கேட்க, அறமன்றமும் கேட்க. மக்களும் கேட்க. இரண்டகர்களும் கேட்கட்டும். மன்றத்-தாரே உங்கள் மொழி தமிழில் தீர்ப்பு எழுதாதது உரிமை இழந்தது ஆகாதா? என்றைக்காவது இதனை எண்ணிப் பார்த்தது உண்டா? சொன்னதை நிலைநிறுத்த முனைந்தது உண்டா? இல்லையே.

அ.வ.உ.: இந்த அறமன்றத்திற்கு உரிமை என்ன தெரியுமா? சட்டத்தைப் படிப்பதும் அதன்படி நடப்பதுந்தான் உரிமை! அதைத் தவிர வேறு உரிமை எதுவும் இருப்பதாய் உன்னைத் தவிர வேறுயாரும் சொன்னது கிடையாது. நான் கேட்கும் கேள்விகளுக்கு ஒரே வரியில் விடை சொல்லவேண்டும். எந்த உரிமையை நீ இழந்தாய்?

வே.மா.: எந்த உரிமையைத் தந்தீர்கள்? நெஞ்சு உணர்ந்து சரியென்று பட்டதை சொல்ல உரிமை உண்டு. அந்த பேச்சு-உரிமையை தடுத்து நிறுத்தியது, உரிமைக் கட்டுபாடுதானே. குற்றம் என்று என் உரிமையைப் பிடுங்கிக் கொண்டதின் பொருள் என்ன? பேசியது குற்றம் என்றுதானே என்னைக் குற்றப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். அஃது உரிமைப் பறிப்புத்தானே. ஒப்பாரி இந்தியை அரியணை ஏற்றத் தமிழ் வளர்ச்சியை உலகெங்கிலும் கெடுக்கிறீர்கள். இந்தியையும், செத்த சமசுகிருதத்தையும் உலக அரங்கில் ஏற்றுகிறீர்கள். தமிழ் மட்டுமன்று, இந்திய மொழிகளில் வேறு எம்மொழி

Scanned with CamScanner

யைத்தான் உரிமையோடு இயங்க விடுகிறீர்கள்? சட்டமும் அதிகாரமும் உங்கள் கையில்; எங்கள் உரிமையைத் தடுப்பீர்களே தவிர கொடுக்கமாட்டீர்கள்.

அ.வ.உ.: தமிழ் வாழ்க என்று நீ சொல்லுகிருய் அல்லவா?

வே.மா.: ஆமாம்.

அ.வ.உ.: வந்தே மாதரம் என்றுதான் சொல்லவேண்டும். ஆனுல் நீ தமிழ் வாழ்க, தமிழினம் வாழ்க, தமிழ்நாடு வாழ்க என்று கூறுகிருயே; அ'து உனக்குக் கொடுத்த உரிமை தானே!

வே.மா.: அப்படிக் கூறியது குற்றம் என்றுதானே என்னை இம்மன்றத்தில் நிறுத்திக் குற்றப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். அ'து உரிமைப் பறிப்புத்தானே.

அ.வ.உ.: வாழ்க தமிழ் என்று சொல்ல சட்டத்தில் இடமில்லை. அதனுல்தான் அது குற்றம் என்று சொல்லுகிறேன். வந்தே மாதரம் என்றுதான் சொல்லவேண்டும், அதுவே சட்டப்படி சரி.

வே.மா.: வந்தேமாதரம் எப்பொருளைத் தரும்?

அ.வ.உ.: தாயே வாழ்க.

வே.மா: எந்தத் தாயை வாழ்த்தவேண்டும்? என் தாயே இருமல் நோயில் படுத்துவிட்டாள். நோஞ்சானுகக் காட்சி அளிக்கிருள், என் தாய் வீழ்ந்து கிடக்கும்போது, மற்றவர் தாயைப் பற்றி எனக்கென்ன கவலை?

அ.வ.உ; தாய் என்று சொல்லும்போது எல்லாத் தாய்களும் ஒன்றுதான். அதுதான் பொதுமை. இதில் தமிழ்த்தாய், இந்தித்தாய் என்று ஏன் பிரிக்கிருய்?

வே.மா: பக்கத்து வீட்டுத் தாய்க்குக் காஞ்சிபுரம் பட்டும், கழுத்தணி மாலையும் கறியும் சோறும் கொடுத்துவிட்டு உங்கள் தாய்க்கு கரடுமுரடு சேலையையும் கால் வயிற்றுக்கஞ்சியும் கொடுத்து நோயாளியாக்கிப் படுக்க வைத்துவிட்டு, எல்லாத்தாயையும் ஒன்று போல் பார்க்கிறேன் என்று பொது உடைமை பேசினுல் ஊரில் உள்ளவன் உங்களை மெச்சுவானு? உங்கள் இந்தி கொழுக்கப் பலகோடி; எங்கள் தமிழ் வளர்ச்சிக்கு இரவல் காசு! என்ன!

அ.வ.உ: நம் ஒற்றுமைக்கு இந்தி வளரத்தானே வேண்டும். இந்தி வளம் பெற்றுல் ஒற்றுமை ஓங்கும்.

வே.மா: ஒன்று சேர்த்தல் என்பது சிதறிக்கிடப்பதைத் தேடிப் பிடித்துச் சேர்த்தலாகும். அ'து என்ன தேய்ந்துகிடக்கும் தேய்ந்த செருப்பா? கிடைத்தது போதும் என்று அணிந்து செல்ல; ஒற்றுமையை வளர்க்க ஒருவர் பெருமையை

ஒருவர் காத்தல், ஒருவருக்கொருவர் உதவியாக இருத்தல், ஒருவர் உரிமையை ஒருவர் பறிக்காமல் இருத்தல் உங்களுக்கு ஒரு ஞாயம், எங்களுக்கு ஒரு ஞாயம் என்றால் ஒற்றுமை குதிரைக் கொம்பே! அதற்குப் பகரமாக முயல் கொம்பைத்தேடி அலைந்ததற்கு ஒப்பாகும்.

அ.வ.உ: இந்தியைப் படித்துவிட்டால் ஒற்றுமை வளர்ந்துவிடும்;

வே.மா: ஒற்றுமை கலைவதற்கே இந்தி மூலமாக இருக்கும் போது அதைப் படித்தால் எப்படி ஒற்றுமை வளரும்? இந்தியாலேதான் ஒற்றுமை விழுந்து கொண்டிருக்கிறது. இ'து எப்படி இருக்கிறது என்றால், விழுகிற பிள்ளைக்கு அரிவாளை அண்டை (முட்டுக்) கொடுத்தாற் போலாகும்;

மக்கள் கூட்டம்: (கட்டுக்கடங்காமல் வேல்மார்பனை விடுதலை செய்ய கிளர்ச்சி செய்கிறது.)

கூட்-தலை: தமிழ்,

கூட்: வாழ்க!

கூட்-தலை: வேல்மார்பனை,

கூட்: விடுதலை செய்!

கூட்-தலை: இந்தி,

கூட்: ஒழிக!

கூட்-தலை: தமிழ்நாடு,

கூட்: தமிழருக்கே!

கூட்-தலை: தமிழர்ல்,

கூட்: ஒன்றுபடுவோம்!

(கூட்டத்தைக் கலைக்கின்றனர்) ஓடுங்கடா, கழுதைகளா; (கம்பால் அடிக்கிறார்கள்.)

கூட்டம் கலைந்துவிட்டது,

நடு: (காவலரிடம்) வேல்மார்பனைச் சிறையி அடைத்து நாளை மன்றத்திற்கு அழைத்து வாருங்கள்.

காவ: (வேல்மார்பனைத் தொடரி (சங்கிலி) போட்டு இழுத்துச் செல்லுகிறார்கள்.)

(திரை)

### காட்சி ச

உறுப்பினர்: வேல்மர்ர்பன், நடுவர், காவலர், மக்கள் கூட்டம் கூட்டத் தலைவன்.

இடம்: வழக்கு மன்றம்.

காலம்: காலை 11 மணி.

காவலர்: (வேல்மார்பனைத் தொடரியால் பிணைத்துக் கட்டி வழக்குமன்றத்துக்கு அழைத்து வருகின்றனர்.)

கூட்-தலை: வேல்மார்பன்,

கூட்: வாழ்க!

கூட்-தலை: தமிழ்,

கூட்: எங்கள் உயிர்!

கூட்-தலை, தமிழால்,

கூட்: ஒன்றுபடுவோம்!

வே.மா: (மக்கள் கூட்டத்தைப் பார்த்து) அருமைத் தமிழ் நெஞ்சங்களே, கூச்சல் குழப்பங்கள் வேண்டாம். தமிழன் தமிழ்நாட்டை ஆளும் வரை நமக்கு இந்த நிலைதான். எனவே உணர்ச்சியை ஊக்குவித்துச் சிறிதும் மொழி, இன, நாட்டுப் பற்றில் குறைவுபடாமல் 'நம்நாடு நமக்கே' என்ற உணர்வோடு வாழுவோம். வழக்கு ஒழுங்காக நடக்கும்படி ஒத்துழைக்க வேண்டுகிறேன். அமைதியாக இருக்கவும். உள்ளே செல்லுகிறேன். வணக்கம்.

காவ: (வேல்மார்பனைக் குற்றக்கூண்டில் நிறுத்துகின்றனர். (வழக்கு தொடங்குகிறது.)

நடு: வேல்மார்பா, அரசு வழக்குரைஞர் கேட்கும் கேள்விகளுக்குத் தகுந்தபடி விடைமட்டும் தரவேண்டும். தேவையற்ற விளத்தங்களைக் கூறிக் குழப்பக் கூடாது. மக்கள் கூட்டத்தைத் தூண்டும் விடைகள் தேவையில்லை- தெரிகிறதா?

வே.மா: குழப்புவது நாங்கள் இல்லை. வேண்டாத ஒன்றை விரும்பும்படி வற்புறுத்தித் தொல்லைகளை உண்டாக்குகிறீர்கள் அதுதான் குழப்பம்,

அ.வ.உ: இந்தியா வெள்ளையனிடம் அடிமையாக இருந்தபோது அதன் விடுதலைக்காக வடநாட்டுத் தலைவர்கள் பட்ட பாட்டை நினைத்துப் பார்க்கவேண்டும். அவர்கள் அரும்பாடு படாதிருந்தால் உரிமை கிடைத்திருக்காது. எனவே இந்திக்காரர் சொல்வதை நாம் கேட்டுத்தானே ஆக வேண்டும்;

வே.மா. இந்திய விடுதலைக்குப் போராடும்போது தமிழர்கள் என்ன நண்டா பிடித்துக் கொண்டிருந்தார்கள்? நாங்களும் சேர்ந்துதான் விடுதலை கேட்டோம். ஆனால் விடுதலை எங்களுக்கில்லை அவர்களுக்குத்தான். ஒருமை ஒருமை என்று சொல்லுகிறீர்களே! ஒரு தமிழனாவது இன்றைக்குத் தலைமைப் பொறுப்பில் இல்லை; என்றைக்காவது இந்தியாவிற்கு தலைமையமைச்சராகவோ, அல்லது குடியரசுத் தலைவராகவோ வரக் கூடிய சூழ்நிலை இருக்கிறதா? இல்லையே!

அ.வ.உ: இப்படிப் பிரித்துப் பேசுதலே தவறு. இந்தியர் என்றால் எல்லாரும் ஒன்றுதான்? இந்தியரில் எவரேனும் ஒருவர் வந்தால் போதும்.

வே.மா: அப்படியானால் இந்தியாவில் உள்ள மொழி எதுவானாலும் ஒன்றுதானே; தமிழைப் பொது மொழியாக ஆக்கட்டுமே. எம் தமிழுக்கு அவ்வலிமை இல்லையா? இலக்கணச்-

Scanned with CamScanner

செறிவும் இலக்கியவளமும், எம்மொழிக்கும் மூலச்சொற்களையும் கொண்ட மொழிதானே தமிழ்: அறிவியல் வளர ஆக்க மொழி அது. கலைச் சொற்களுக்கு வேர் தென்மொழி. உலக மொழியியல் வல்லுநர் அனைவரும் ஒத்துக் கொண்ட செய்தி அது.

அ.வ.உ.: வேல்மார்பனே, தமிழன், நான் தமிழன் என்று எங்கே: யாவது சொல்லுகிறானா? தமிழ்மொழியை எவன் விரும்பிப் படிக்கிறான்? இங்குள்ளவன் தமிழில் பேசவே கூசுகிறான். வாயைத்திறந்தால் ஆங்கிலம் வரும். பேசப் பழகும் குழந்தைக்குக்கூட அப்பாவை, 'டாடி' என்றும் அம்மாவை 'மம்மி', என்றும் கூறக் கற்றுக்கொடுக்கிறான். தவறினால் கலப்பு மொழிப் பேச்சு! ஒருவனை ஒருவன் சந்தித்தால் 'நமஸ்காரம்', 'சௌக்கியமா'? என்று கேட்க, விடையாக 'ஈஸ்வர கடாட்சத்தால் சௌக்கியம்' என்றுதானே கூறுகிறான்: நலம் என்ற சொல் தமிழன் வாயில் வருவதே இல்லையே. தமிழ் படித்தால் சோறு கிடைக்குமா? இந்தி படித்தால் வேலை கிடைக்கும்.

வே.மா.: சோற்றுக்கு வாழும் உங்களுக்கு அது சரி; நாய்கூடத்தான் சோற்றுக்கு வாழ்கிறது. எச்சில் எலும்பிற்காக ஒருவன் பின்னால் போகிறது. அதற்கும் மாந்தனுக்கும் வேறுபாடு வேண்டாமா? மொழி உரிமை என்பது நெஞ்சில் முளைப்பது. மொழி உரிமை கேட்பது உணர்வில் முகிழ்ப்பது: அதைப் பெறுவதுதான் வாழ்க்கையின் குறி. (தன்னைக் காட்டி) இந்த உடம்பு சோற்றுக்காக வாழவில்லை; மானத்துக்காக வாழ்கிறது.

அ.வ.உ.: நீ ஒரு கடுமையாளன் (தீவிரவாதி) அதுமட்டுமன்று; குமுக எதிரி (சமூக விரோதி); இப்படிக் கூடச் சொல்லலாம்; நீ ஓர் இரண்டகத் தீங்கன்.

வே.மா.: அப்படியானால், இந்திய விடுதலைக்குப் போராடிய காந்திக்கும் இந்தப் பட்டத்தைக் கொடுக்கலாமா? வெள்ளையனைச் சுட்டவனென்று பெருமை அடித்துக் கொண்டிருக்கிறீர்களே, வாஞ்சிநாதன் அவன்; இரண்டகன் தானே. பெரும்பாவலர் (மகாகவி) என்று நாள் தவறாது புகழ்ந்து கொண்டிருக்கிறீர்களே அவன் ஒரு கடுமையாளன். அக்கால வெள்ளையனை எதிர்த்து நின்ற நேரு என்ன தீங்கனா?

அ.வ.உ.: அவர்கள் யாவரும் ஈகிகள் (தியாகிகள்)! அவர்களால்தான் இன்று நீயும் நானும் இங்கு உரிமையோடு திரிகிறோம்.

வே.மா.: ஆமாம், ஆமாம் கஞ்சிக்கு வழி இல்லாமல் திரிகிறோம்.

அ.வ.உ.: இந்திய விடுதலைக்குப்பின் உன் உணர்வுகளைப் புதுப்பித்துக் கொண்டாய் என்று நினைக்கிறேன்.

வே.மா.: உணர்வைப் புதுக்கிட அ'து என்ன பித்தளையா? அல்லது செம்பா? உணர்வு என்பது பற்றுதலால் வளரக்

கூடியது. இயற்கையாகவே உள்ளத்தில் முளைத்து மலர்வது. உணர்வு வளர வளர உணர்ச்சி பொங்கும். உணர்ச்சி கிளர்ச்சிக்கு வழி வகுக்கும். கிளர்ச்சியின் முடிவே புரட்சி. அதன்பின் வெற்றி.

அ.வ.உ.: அப்படி ஒரு வெற்றியை நீ பெற்றுவிடலாம் என்று எண்ணித்தான், இறங்கி இருக்கிறாய் என்று கருதுகிறேன். என்ன? அப்படித்தானா?

வே.மா.: ஆமாம். நான் என்ன நோக்கத்திற்காகக் குறிக்கோளை முன்னிறுத்திப் போராடுகிறேனோ, அதன் மேல் எனக்கு நம்பிக்கை உண்டு. அதனால் வெற்றியிலும் நம்பிக்கை உண்டு.

அ.வ.உ.: உன் நம்பிக்கை போகவேண்டிய இடம் போகாமல், உன்னை நிறுத்திவைத்திருக்கும் இடம் எங்கே தெரியுமா? உன்னைப் போன்றவர்கள் வரவேண்டிய இடம் இதுவே. இங்கிருந்து வேண்டுமானால் உன் உடல் போகலாம். உயிர் போகாது.

வே.மா.: உயிரைப் பற்றிக் கவலைப்படாதவன் நான். என் உணர்வைப் பற்றியே எண்ணிக் கொண்டிருப்பவன். எனக்கு வேண்டுவதெல்லாம் தமிழ்நாடு; உயிரன்று.

அ.வ.உ.: உன் உயிர் போனபின், நாட்டை வாங்குவது யார்?

வே.மா.: உணர்வு என்பது எனக்கு மட்டும் சொந்தமன்று; அது கோடானு கோடி தமிழ் மக்களுக்கும் உண்டு. நான் மறைந்-தால் மக்களிடம் இருக்கும் உணர்வு மறையாது; குறையாது.

அ.வ.உ.: உணர்வைச் சிறைக்குள் வைத்துப் பூட்டிவிட்டால்?

வே.மா.: உணர்ச்சி வந்ததும் சிறை உடைபடும்.

அ.வ.உ.: சிறை உடைபடுமா? இந்தியப்படை என்ன? கைகட்டிக் கொண்டா இருக்கும்?

வே.மா. வரலாறு சொல்லும் சான்றுகளை மறக்கவேண்டாம். மக்கள் எழுந்தால் படைகள் சுக்கு நூறாகும். மக்களின் உரிமை உணர்வு ஒருவனைக் கொல்வதால் ஒருநாளும் மாயாது. தேய்ந்து வரும் உரிமையைச் சாயாமல் பார்ப்பது உணர்வுதானே; உரிமையைத் தட்டிப்பறிக்க முடியும்; ஆனால் உணர்வைத் தடுக்கமுடியாது. அது உரிமையை மீட்டி விடும்.

அ.வ.உ.: நீ அரசுக்கு எதிராக முழக்கமிடுகிறாய். இந்தக் குற்றத்திற்கு உன்னை எதுவும் செய்யலாம். உன்னை அடக்கும் சட்டம் ஆட்சியாளர்களின் கையில் உள்ளது.

வே.மா.: முழக்கத்தை எள்ளி நகையாடுதல் ஆட்சிக்கு இறுதி.

அ.வ.உ.; துடுக்குத்தனமாய்ப் பேசுகிறாய். எங்கிருந்து பேசு-கிறாய் என்பதை மறந்து இருமாப்பில் பேசாதே, உன் பேச்சை அடக்கி அளவோடு பேசு. உரிமை உரிமை என்று கேட்-கிறாய்; உரிமை பெரிதா அல்லது வாழ்க்கையா?

Scanned with CamScanner

வே.மா.: உரிமையோடு வாழும் வாழ்க்கையே உயர்ந்தது.

அ.வ.உ.: இந்தியா என்ற இந்த நிலமும், இதிலுள்ள பொருள்களும் இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் பொது. அது மட்டுமன்று; சொந்தம். இதில் நீ மட்டும் எனக்குத் தனியாக உரிமை வேண்டுமென்றால், அது பொருந்துமா?

வே.மா.: சரி. இந்த நிலமும் அதிலிருக்கும் பொருள்கள் எல்லாமும் யாருக்குப் பொதுவாக இருக்கவேண்டும்?

அ.வ.உ.; இந்த நாட்டு மக்களுக்கு.

வே.மா.: இருக்கிறதா. அப்படி?

அ.வ.உ.: இல்லை என்று சொல்லுகிறாயா?

வே.மா.: எங்கே இருக்கிறது? தமிழ் நாட்டு மண் தமிழனுக்குத் தானே சொந்தமாக இருக்கவேண்டும். வட நாட்டுக்காரனுக்கன்றோ சொந்தமாக இருக்கிறது. இந்த நாட்டில் பேசும் மொழியைத்தான் நாம் பேசமுடியும். அயல் நாட்டு மொழியை அன்றோ படிக்கக்கூறுகிறான். இங்கிருக்கும் சட்ட அவையை அவன் நினைத்தால்தானே நடத்த முடிகிறது. அ'து ஒரு பக்கம் இருக்கட்டும். இங்கு விளைகிற நெல்லுக்கு இங்கு விளைவித்தவன்தான் விலை வைத்து விற்கவேண்டும். அப்படி இல்லையே, வடநாட்டுக்காரனல்லவா விலை வைத்து விற்கச் சொல்லுகிறான்.

நடு: வழக்கறிஞராக ஆகவேண்டியவனைக் கொண்டு வந்து குற்றப்படுத்திச் சொன்னால்; நடக்குமா? வழக்குரைஞர் அவர்களே! இவனை என்ன செய்யவேண்டும் என்று வடக்கே எழுதிக் கேட்டுத்தான் ஏதாவது செய்யமுடியும்.வழக்கு உசாவலைத் தள்ளி வைத்துவிடுவோம். வடக்கிருந்து விடை வந்த பின்னரே உசாவலாம்.

வே.மா.: பார்த்தீர்களா? தமிழ் நாட்டிலுள்ள வழக்கு மன்றமும், நீங்களும் இங்குடையவர்கள் தாம். என்னைத் தண்டிக்க வடக்கே கேட்க வேண்டிய அவலநிலை உள்ளதே. உங்களுக்கே உரிமையில்லை.

நடு: இவனைச் சிறையில் அடையுங்கள். வடக்கிருந்து விடை வரட்டும்.

காவ: *(வேல்மார்பனை இழுத்துச் செல்லுகின்றனர்.)* (திரை)

(தொடரும்)

---

## அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். — அமைச்சர்

Scanned with CamScanner

# பறம்பை அறிவன் எழுதுகிறார்!

## 1. மடல்களுக்கு மறுமொழி,, ?!

'தென்மொழி' அன்பர்களின் மடல்களுக்கு மறுமொழி தருவது அப்படியொன்றும் எளிய செயலன்று. காரணம், அவர்களின் கொந்தளிக்கும் உணர்ச்சிகளுக்கு வடிகாலாக 'மறுமொழி' தருதல் இயலாது. தாழ்ந்தும், எழுந்தும், பரவியும், குறுகியும் அளக்கவியலாத அன்பின், அறிவின் எல்லைகளை அவை தொட முயல்வன! ஆயினும், 'தென்மொழி' அன்புகளிடம் உரையாடுதல், உணர்வு கலத்தல், ஒன்றிணைதல் என்பதோர் இன்பம், உவகை பெற முயல்வோம்! அதன்வழி நம் இயக்கம் வீச்சும், எழுச்சியும், முடுகுதலும் பெறுமாகுக!

பெரங்கியம் (தெ. ஆ) சி. வரதராசன் மடலில் (1359) 'புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் இலக்கிய மன்றம்' உருவாக்கப் பெற்று ஓராண்டாகச் செயல்படுவதாகக் கூறியுள்ளார். 'புரட்சிப் பாவலர்' என்பதே 'கனக. சுப்புரெத்தினம்' அவர்களைக் குறிப்பிடப் போதுமான 'அடைமொழி' யாகும்.

'பாரதிதாசனைப்'ப் பெரியார் வழிச் சிந்தனையாளர் ஏற்பதில்லை. ''தாசன்' என்ற 'அடிமைக் குறிப்பை' 'வீரத்தமிழ்ப் பாவலர்'க்கு வழங்குதல் சரியன்று. ஒருகால் எசு. டி. விவேகி அவர்கள் 'புரட்சிப்பாவலரிடம்' 'தாசன்' என்பதன் இழிவைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். புரட்சிப்பாவலர், அவர்க்குள்ள 'பாரதி' மேற் கொண்ட பற்றுக் காரணமாக, முதலில் சினம் கொண்டு, விவேகி அவர்களைத் 'திட்டினார்'. எனினும் பின்னர், அறிவுணர்ச்சி காரணமாக விவேகியாரின் விளக்கத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார். இது குறித்து விவேகியாரிடம் கேட்டு விரிவான விளக்கம் பெறலாம்!

'பாவேந்தர்' என்ற அடைமொழியை 'நிலக்கிழமை'த் தன்மை உடையதென்பர். இதனைப் பொதுமைக் கொள்கை வழி நின்று மறுக்கிறவர்கள் உண்டு!

அதே வேளை, புரட்சிப்பாவலரின் 'தொடக்கக்காலம்' இறுதிக் காலம்' குறித்த உண்மையான நிலைமைகளையும், அரசியல் கோணல்களையும் ஆராய்கின்ற விரிவான சிந்தனைக்கும் தமிழின விடுதலைக்கான நோக்கிற்கும் தக திரு. சி. வரதராசன் சார்ந்துள்ள 'இலக்கிய மன்றம்' தன்னை வளர்த்துக் கொள்ள முன்வரும் என எதிர்பார்ப்போம்!

உ. செல்லூர் சித்தலைச் சாத்தனாரின் மடல் (1360) 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு', 'தமிழ்நிலம்' பரவக் கலைஞர் அரசு உதவவேண்டும் என எதிர்பார்க்கிறார்!

கலைஞர், பாவலரேறு இருவரையும் தமிழினம் தமிழ் மக்கள்-தாம் காத்து நிற்றல் முடியும். கலைஞரின் சாய்கால் குறித்து நாம் விளக்கிக் கொண்டிருத்தல் வேண்டாம்!

பாவலரேறு அவர்களின் தொலை நோக்குடைய கொள்கைக்கு மக்களைத் திரட்டவேண்டுவது, இதழ்களைப் பரப்பவேண்டுவது

நம் போன்ற முன்னணி ஆதரவாளர்க்கே உள்ள கடனாகும்! இதனைச் சித்தலைச் சாத்தனார் அறிவார். எனினும், 'கலைஞர்' மீது கொண்ட நம்பிக்கை காரணமாக 'இன்றுள்ள அரசு மீதான நம்பிக்கையால் இப்படி ஒருமடலை வரைந்திருக்கிறார் என்றே கருதுகின்றேன்!

'அறிவுத் தெளிவும், தன்மானமும் பெற' வாழ்நாள் முழுவதும் படித்து இன்பம் பெற விழைகின்ற அன்பர் (ந. உமாபதி, காரைக்குடி-2. மடல் 1361) விடுதலைப் போராளி பெறும் இன்பத்தையே கூறியுள்ளார் எனக் கருதுகின்றேன். ஈகத்தாலும் தன்னல மறுப்பாலும் இயங்கும் தென்மொழி இயக்கத்தில் அவர் எதிர்பார்க்கும் இன்பம் வேறு எதுவாக இருத்தல் இயலும்?

திரு. இ. முத்துசாமி, இலத்திகுளம், (நெல்லை) எழுதியமடல் 'தேங்கிக்கிடக்கும் தமிழுணர்வுகளை'—ஆம், தென்மொழி, தமிழ் நிலம், தமிழ்ச்சிட்டு இதழ்களை வாங்கியும், படித்தும் பரப்புதல் வேண்டுவது ஒரு கடமையே! இக்கடமையை வலியுறுத்தும் இம்மடலின் (1362) உணர்வினைப் பாராட்டுகின்றேன்.

இவ்விதழ்களை அச்சிடுதலும், மறு அச்சுப்போடுதலும் மிக மிக வேண்டுவதாகும். ஆயினும், 'தேங்கிக்கிடப்பதால்' ஏற்படும் இழப்பும், துயரமும் தமிழரிடையேயுள்ள பல நோய்களாலேயே என்க!

எழுத்துச் சீர்திருத்தம் குறித்து வா. செ. குழந்தைசாமி எடுக்கும் முயற்சிகள் கண்டு நாம் 'கவலை' கொள்ளக் காரணம் உண்டு. தமிழின் தகுதி, தமிழரின் உரிமைக்கான போராட்டத்தில் கருத்துக் குருடராகவுள்ள அறிவாளிகள், தங்கள் 'புலமை', வரலாற்றில் 'இடம்' பெறும் நோக்கம் கொண்டு செயல்படுவதாகவே தெரிகிறது. இன்றெழுதப் பெறுகின்ற வரலாற்றில் 'ஆளும் கும்பலுக்கான செய்திகளே இடம் பெறுதல்' கண்கூடு.

எதிர் நீச்சலிடம் புரட்சியாளர்கள் அப்படியொன்றும் எளிதாக, எம். சி. ஆர். புரட்சித் தலைவர் போல் பாடநூல்களில் 'இடம்' பிடித்துவிட முடியாதுதான்! எனவே, கோ. இரவிச்சந்திரனார் சென்னை-54 (1363 மடல்) நோக்கின், எழுத்துச் சீர்திருத்தம் குறித்து அக்கறை காட்ட இதுகாலம் அன்று என்பதை உணர்த்தும் கட்டாயம் நமக்குளதென்பது புரியும்!

பிரதாப்குமார், பெங்களூர்-10. (மடல் 1364), தமது பெயரைத் தமிழில் மாற்றிக் கொண்டால்...? ஆனபோதும் அவர்தம் 'இனமானவுணர்வை'ப் பெரிதும் போற்றுகிறேன்!

பாவலரேறு அவர்களுக்கும் நமக்கும் இதுபோன்ற தென்பு மடல்கள் தளர்ச்சி நீக்கமாக இருத்தல் கூடும்...

கத்தி வழி... நாடாளுமன்ற வழி... என்றெல்லாம் உத்தி முறை குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறோம்... தமிழினமக்களிடையேயும், உலகத் தமிழரிடையேயும்... அரசியல் அறிவாளரிடையேயும் நாம் நம் உரிமைப் போராட்டத்தின் உண்மைகளை எடுத்துப் போவோம்!

Scanned with CamScanner

தோழர் அதியமான், தாழையூற்று அவர்களின் (மடல் 1365) ஆர்வம், பாவலரேறு ஒரு செயல்திட்டம் தரல் வேண்டும் என்பதாகும்!

செயல்திட்டம்... திறப்பாடுடையவர் கூட்டம் இரண்டும் இணைதல்வேண்டும். அதற்கான முயற்சிகளை முனைந்து மேற்கொள்ளும் தகுதி அதியமான் அவர்களிடம் அதிகம் என்று நம்புகிறேன்!

## 2. தமிழா, இது கேள்!

தமிழ்நாட்டில் வாழ்கிறோமா என்ற ஐயம் அடிக்கடி எழுவது இயல்பே. தமிழாயும் போதும், தமிழர் படைப்புகளைக் காணும்போதும், தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் காணும் போதும் தமிழகத்தில் வாழ்கிற நினைப்பு வருகின்றது.

தமிழக மக்களின் வாழ்நிலை அவ்வளவு அவலப்பட்டுள்ளது. மாநகர் மதுரையில் நடந்த—தமிழர் தேசிய இயக்க முன் முயற்சியில் நிகழ்ந்த—'எச்சரிக்கை மாநாட்டின்' போது எழுச்சி மிக்க தோழர் பலரைக் கண்டின்புற்றோம்; புதிய நம்பிக்கை ஒளியில் குளித்தோம்!

பாவலரேறு அவர்களின் குடும்பத்தில் நாமெல்லாரும் இணைந்திருந்து வாழ்கிற உணர்வு பெறுவோம்! தமிழனின் மேன்மைக்கென வாழுகின்ற ஓரிரண்டு அறிஞர்களையும் நாம் பேணி உறவாக்கிக் கொள்ளுதல் வேண்டுமே என்ற 'கவலை' பிறக்கிறது.

தமிழர் எவரையும் புறந்தள்ளாத பேருள்ளம் பாவலரேறு அவர்களிடம் அமைந்துள்ளதெனலாம்! ஆகவேதான், 'தி.மு.க., அ.தி.மு.க. போன்ற, ஏன் பேராயக் கட்சி போன்ற அமைப்புகளுக்குள்ளும் 'நல்ல' தமிழுள்ளம், தமிழர் இருக்கின்றனர்' என்று அவர் பேசுகின்றார்.

தமிழரை ஒரு கூட்டாகக் கட்டி வைத்துவிடத் தமிழாலும், தமிழின உரிமை வேட்கையாலும் முடியும் என்பது நம் பாவலரேறு அவர்களின் உளப்பாங்கெனலாம்!

உள்பகை, உள்முரண், இரண்டகம் ஆகிய போக்குகளைக் களைவதில் அவர் சளைத்தாரிலர். பார்ப்பனியம், சாதியத்தளை, தமிழினத் தாழ்வு பற்றி அவர் மிகுந்த எச்சரிக்கையோடுதான் உள்ளார்!

## 3. அம்மவோ?

'அப்பாத்துரையார் எனும் அறிவாட்சி அடங்கியதே! என்ற ஒப்புவைத்து உளம் உருகிக் கொண்டிருக்கும் தமிழனின் உள்ளம் வெடிக்கும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன!

அறிஞர்கள், போராளிகள், இவர்களை இழந்து கொண்டு வருகின்றோம்! இருப்பவரையும் போற்றும் செயலறியாமல் மயங்கிக் கிடக்கின்றோம்! வரலாற்றில் ஒரு துரும்பை அசைத்த தூயவர்கள் எவராயினும், அவர் பின்னர் தந்நலத்தாலும், முதுமையாலும், பகைவர் சூழ்ச்சியாலும் 'நிலையில் திரிந்த

போதும்', தாயன்புடன் தழுவிப் போற்றிக் கொள்வோம்!

'நன்று ஒன்று உள்ளும்' நயன்மை தெரிந்தவர் நாம்!

விடுதலையை விரைவு படுத்துகின்றவர் போராளிகள் மட்டுமா? பகைவருந்தாம்! ஏன்? இரண்டகம் செய்கின்றவரும், கோடரிக்காம்புகளும்கூட விடுதலையை விரைவுபடுத்துகின்றவரே! மக்களிடையே விடுதலைக்கான வித்துகள் உள்ளன. அவை, புரட்சியை முன்னெடுத்துப் போடும் ஆற்றலுடையவை!

பகைவர்கள், நம்மிடையே புகுந்து நம்மவர் போல நடித்து நம்மையே மடித்து நமக்குள்ளேயே பிளவு செய்தல் கூடும்!

தமிழா... அமிர்தலிங்கம்... யோகேசுவரன்...உமாமகேசுவரன்... இவர்களைக் குறித்த வரலாறுகளிலிருந்து கற்றுத் தெளிந்து முன்னேறு... புரட்சி செய்!

## 4. பாவலரேறு போலொரு...

பாவலரேறு போலொரு
பாவலனை இப்புவியிடைப்
பார்க்கவும் அஞ்சுகிறேன்...
இவனை விஞ்சவும்
கூடுமோ வென?

தாய்த்தமிழ்க் கிவனே,
இன்றுளாரில் ஈடிணையற்றவன்
என்பதால், போற்றுவேன்;
என்றபோதும், வேறு நிலத்திடை,
வேறு மொழியிடை
இவனை விஞ்சிடவொருவன்
உண்டெனக் கேட்கவும் நாணுகிறேன்;
தமிழனொருவனை விஞ்சுவானோ என்பதால்!

இயற்கை எழிலை...
இயக்க நுட்பத்தை...
மயக்கம் அற்ற மதியை...!
இவனிடம் காண்கிறேன்...!
வேறெவரிடை காணினும்...
இவனை விஞ்சுவனோ என
அஞ்சுகிறேன்...!

தலைமை கொள் தமிழெனக்கண்ட
மொழி நூலார் கூற்றினைப்
பொய்யென ஆக்கப் புல்லியர்
சொல்வதைக் கேட்டே...
இவனியக்க மெல்லாம்
எழுத்தாய்ப் படைப்பாய்க் காணவோ
ஆசைப்பட்டான்...
செயலாய்க் காணத் தவம்புரிவான்!!

Scanned with CamScanner

# செய்திகள்

## 1 செல்வம்-வசந்தகுமாரி வாழ்க!

கடந்த தி. பி. 2020, விடைத்திங்கள் 32 (14-6-89) அறிவன் (புதன்) கிழமை, காலை 9-30 மணியளவில், பெங்களூர் சேசாத்திரிபுரம், வெங்கடேசா திருமண மண்டபத்தில், பாலாபுரம் கணேசன்—சந்திரா இணையரின் மகன் செல்வன் (க. சம்பத் என்ற) க. செல்வத்திற்கும், பெங்களூர் இராமமூர்த்தி மகள் செல்வி இரா. வசந்தகுமாரிக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் சீரும் சிறப்புமாகத் தமிழ்த் திருமணம் இனிதே நிறைவேறியது. தொடக்கத்தில் சி. பசுமலையரசு வரவேற்புரை நிகழ்த்தினார். அடுத்துத் திருமண நிகழ்வைப் பாவலரேறு அவர்கள் செய்து வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார். பின்னர் அன்பர்கள் திருவாளர்கள் நா. தென்னவன், அ. கு. தமிழன்பன், தி.மு.க. முன்னாள் மாநகராட்சி உறுப்பினர் வே. இராமலிங்கம், கருநாடக, திராவிடர் கழகத் துணைத் தலைவர் வி. சி. கிருட்டிணன் ஆகியோர் மக்களை வாழ்த்திப் பேசினர். இறுதியில், திரு. சி. பூ. மணி நன்றியுரைக்குப் பின் வந்திருந்தவர்களுக்கு இனிய விருந்து வழங்கப் பெற்றது. திருமண ஏற்பாட்டை உ. த. க. தலைவர் திரு. க. அரசு அவர்கள் முன்னின்று செய்ததால் உள்ளூர் வெளியூர்களிலிருந்து ஏராளமான தமிழன்பர்களும் கருநாடக அன்பர்களும் கலந்து கொண்டது மிகவும் குறிப்பிடத்தக்கது.

## 2. கோபாலகிருட்டிணன்-கற்பகம் வாழ்க!

சென்ற 16-6-89 வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில், சென்னை, எண்ணூர், கத்திவாக்கம் நகராட்சி நகரிய திருமண மண்டபத்தில். மறைந்த முத்து-அம்புசம்மாள் இணையரின் மகன் செல்வன் மு. கோபாலகிருட்டிணன் அவர்களுக்கும், சேக்காடு, மறைந்த துரைசாமி—முனியம்மாள் இணையரின் மகள் செல்வி. து. கற்பகத்திற்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில், மிகவும் சிறப்புற தமிழ்த் திருமணம் இனிதே நடைபெற்றது. திருவாளர்கள் பி. எசு. மணி, எசு. எசு. மணி இருவரும் முன்னிலை தாங்கினர். மணநிகழ்வுக்கும் தலைவர் வாழ்த்துரைக்கும் பின்னர், சின்ன சேக்காடு, பேரூராட்சித் தலைவர் திரு. எப். தசரதன், எண்ணூர், பைந்தமிழ்ப் பாசறை, தலைவர் திரு. ம. தென்முகநம்பி, திருவாளர்கள் இரா. புருடோத்தமன், வ. பன்னீர்ச்செல்வம், கு. அண்ணாத்துரை, த. பிரகாசம் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி நலவுரை வழங்கினர். இறுதியில் மு, போசு நன்றியுரை கூறினர்.

## 3. பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்களின் புகழ் வணக்கக் கூட்டம்-சென்னை:

கடந்த, 21—6—89 அறிவன் (புதன்) கிழமை மாலை 7 மணியளவில், சென்னை-6, தேவநேயப் பாவாணர் நடுவண் நூலகக் கருத்தரங்கக் கூடத்தில், மறைந்த பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்களுக்குப் புகழ் வணக்கக் கூட்ட-

மும், மறைந்த பேரறிஞர்கள் பர். வ. சுப. மாணிக்கனார், பர். க. த. திருநாவுக்கரசு ஆகியோர் திருவுருவப் படத்திறப்பும் நடந்தன. நிகழ்ச்சியைத் தலைநகர் தமிழ்ச் சங்கம் நடத்தியது. நிகழ்ச்சிக்கு முதுபெரும் அறிஞர் திரு. நாரண துரைக்கண்ணனார் தலைமை தாங்கினார்.

தொடக்கத்தில் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்களின் படத்தை முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்களும். மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார் அவர்களின் படத்தை, முன்னாள் அமைச்சர் திரு. இராம. வீரப்பனார் அவர்களும், வரலாற்றறிஞர் க. த. திருநாவுக்கரசு அவர்களின் படத்தை திரு பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களும் திறந்து வைத்தனர். அதன் பின்னர் பாட்டு வணக்கம் நிகழ்ச்சி நடந்தது. பாவலர்கள் வெற்றியழகன், பாட்டாளி பழநியப்பன், கே. கே. மூர்த்தி, கமலக்கண்ணன், கதிரவன், காவனூர் வேலன் ஆகியோர் மறைந்த தலைவர்களுக்குப் பாட்டு வணக்கம் செலுத்தினர்.

அடுத்து, திருவாளர்கள் மாமணி, ஊ: செயராமன், மா. சு. சம்பந்தன், புலவர். த. சுந்தரராசன், புலவர் கோ. தேவராசன், புலவர். பி சி. கணேசன், புலவர் முத்து எத்திராசன் ஆகியோர் இரங்கலுரை நிகழ்த்தினர்.

இறுதியில், பாவலரேறு பெருஞ்சித்திரனார், இராம. வீரப்பன் கி. ஆ. பெ. விசுவநாதன் ஆகியோர் மறைந்த அறிஞர்கள் தமக்கு இரங்கலுரையும் கருத்துரையும் நிகழ்த்தினர்.

கூட்டம் இரவு 10-30 மணியளவில் நிறைவுற்றது. கூட்டத்திற்கு அப்பாத்துரையார் குடும்பமும் பல்துறை அறிஞர் பெருமக்களும், உள்ளூர் வெளியூர் அன்பர்களும் அரங்கு நிறைய வந்திருந்து, சிறப்புச் செய்தனர்.

# இரங்கல்கள்!

## 1. தேவநேயச்சித்திரன் மறைவு!

தொடக்கக் காலத் தீவிரத் தென்மொழித் தொண்டரும் பாவாணர் மேலும் பாவலரேறுவின் மேலும் தணியாத பற்றினாலும் பேரன்பினாலும் தம் பெயரையே தேவநேயச்சித்திரன் என்று வைத்துக் கொண்டவரும், தென்னார்க்காடு மாவட்டம் கல்லக்குறிச்சியைச் சேர்ந்த வரும் ஆகிய, தேவநேயச்சித்திரன் அவர்கள் நெடுநாள் நோய்வாய்ப்பட்டிருந்து கடந்த சூலை மாத இடையில் மறைவெய்தினார் என்னும் செய்தி கேட்டு ஆராத்துயரம் கொண்டோம். தொடக்கத்தில் தென்மொழியை நிலைப்படுத்திய பேருழைப்பில் அவருக்குப் பெரும் பங்குண்டு. இறுதி வரை தென்மொழியின் பால் விடுதலறியாத் தொடர்பு கொண்டு அதன் வளர்ச்சிக்கு ஒத்துழைத்த அப்பெருந்தொண்டரின் மறைவால் வருத்தமுறும் அவரின் அன்புத்துணைவி செல்விக்கும் அவரின்

ஆட்சி: பகலில்... பாதசாரிகள் நடக்கின்றார்கள். இரவில் எங்கள் குடும்பங்கள் நடக்கின்றன. சிலருக்கு வாணிகமும் நடக்கின்றது. இதுதான் எங்கள் மா...நகர்...ஆட்சி...!

கற்புக்கரசி: கூடையில் சுமந்து சென்ற தொழுநோய்க் கணவனை விலைமகள் வீட்டில் இறக்கிவிட்டு, அவள் வீட்டிற்கு வந்ததும் தன்னைச் சரிப்படுத்திக் கொண்டாள்!

இந்துமதம்: ஒரே இருட்டு... கண்களைக் கட்டிக் கொண்டு... அந்தக் கறுப்புப் பூனையைக் கண்டுபிடிக்க அலைந்து கொண்டே இருக்கிறார்கள்...

குறள் காட்டும் வாழ்வு: 'பிறப்பொக்கும் — எல்லா உயிர்க்கும்.' 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பு'—என்று வள்ளுவப் பெருந்தகை கூறியதால்தான் எங்கள் 'சத்து'ணவுக் கூடத்தில் பன்றிகள், நாய்களுடன் நாங்கள் பகிர்ந்து உண்கிறோம்!

தேர்தல்: காசுக்காக வேலை செய்யும் அரசியல் கூலிகளின் அறுவடைக் காலம்!

ஊமை: எங்கள் பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர் மட்டுந்தாம் பொய் பேசுவதேயில்லை!

மது: மருந்தாக அருந்தினேன்... என்னை விருந்தாக்கிக் கொண்டது...!

பிள்ளைக்கூலி (வரதட்சணை): கன்னிப்பூக்கள் கனிவதற்குக்கூட நம் நாட்டில் காசு கொடுக்க வேண்டும்.

வரி: மூட்டைகளைச் சுமந்தால்கூட கூலி கொடுப்பார்கள்... 'வாரிசு'களைச் சுமக்கும் எங்களுக்கு ஏன் வரி போடுகிறார்கள்?

பதவி: குப்பையைக் கிளறிக் கொண்டிருந்த கோழிக்கு ஒரு கோகினூர் வைரம் கிடைத்தது...!

எதிர்காலம்...?: ஒப்போலையா(வாக்கா)ளர்களே! நீங்கள் விலைமகளிர்களா? அவள் உடம்பை மட்டும் விலை பேசுகின்றாள். ஆனால், நீங்கள் உங்களையே விலை பேசுகின்றீர்களே!

நீத்தார் கடன்:...!: நாங்கள் செத்த பிறகு போடும் நல்லுணவுப் படையல், எங்கள் பசிக்குக் கிடைக்காத எச்சிலைக் குப்பைகள்!

யார்?: கடவுளைக் கும்பிடக் கோவிலுக்குள் நுழைந்தேன்; அங்கு 'திருடர்கள் எச்சரிக்கை' என்று பெயர்ப் பலகை தொங்கிக் கொண்டிருந்தது...!

ஐந்தாண்டுத் திட்டம்: பசியால் துடிக்கின்ற பச்சிளங் குழந்தைக்கு, அந்தத் தாய் வானத்து நிலவில் பாலைக் காட்டுகிறாள்!

பேரம்: விலை கூறும் மாது! அவள் ஆடை களைந்தாள்!
நிலை தடுமாறி அவன் நிழலைப் பிடித்தான்...!
சிலையாகக் கிடந்து அவள் சித்திரமானாள்!
செருப்புத் தைத்த கூலிக்குப் பேரம் பேசியவன்
உருப்படாமல் செய்தவளுக்கு வாரி இறைத்தான்...! ○

Scanned with CamScanner

ஒ: 1368: அன்பார்ந்த ஐயா, பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் பற்றி இன்னும் ஓராண்டு வரை செய்திகளைத் தென்மொழி மூலம் தந்து கொண்டே இருங்கள். நாங்கள் படித்துக் கொண்டே இருக்கிறோம். —வே. தமிழ்மாறன் அம்மன்புரம்.

ஒ: 1369; தொழுதகையீர்! வணக்கம்; தென்மொழியில் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையாருக்குத் தாங்கள் செலுத்தியுள்ள வணக்கப் பொன்னுரை நெஞ்சம் நெகிழ்த்தது. ஒவ்வோர் எழுத்தும் உள்ளுணர்வில் ஊறி அப்பெருமகனுர்க்குப் பெருமை சேர்க்கும் பெற்றியதாய் விளங்கக் கண்டேன். தங்கள் ஆசிரிய உரை உண்மைப் புலமையாளரை இனங்காண உதவுவது மட்டுமன்றி, வருங்கால இளைஞர்க்கு ஊக்கமூட்டும் சீர்மைத்து. தங்கள் தெள்ளிய நோக்குக்கும் ஒள்ளிய அறிவுக்கும் தமிழகம் கடமைப்பட்டுள்ளது. பேரா. இரா. மதிவாணன்
இயக்குநர்: செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித்துறை. சென்னை-50

ஒ: 1370: அன்புடன் அய்யா பெருஞ்சித்திரனர் அவர்களுக்கு! உங்கள் மேல் அன்பு வைத்திருக்கும் தயாளன் எழுதும் மடல்... நான் பெரியாரைப் பார்த்தது இல்லை; பெரியாரைப் பார்க்காதது வாழ்வில் இழந்துவிட்ட ஒன்று என்று எண்ணினேன். அந்தக் கவலை இல்லை; தமிழ் நிலத்தின் இணை இல்லாத பெரியாராகத் தங்களைப் பார்க்கிறேன். இங்கு புலவர் தமிழ்மாறன் (அம்மன்புரம்) மூலம் தங்களை அறிவேன். மதுரையில் ஈழவிடுதலை மாநாட்டில் தங்களைப் பார்த்தது உண்டு; கோவையில் பார்த்தது உண்டு; கருத்தோடு பார்த்துப் பேசும் வாய்ப்பு தாங்கள் 14-7-89 அன்று மதுரை வந்த போது கிடைத்து இருக்கிறது. தாங்கள் திருநெல்வேலி மாவட்டம் வரும்போது எங்கள் ஊரில் கூட்டம் ஏற்பாடு செய்கிறேன். அன்புடன், —தா. தயாளன், ஆலங்குளம்,

ஒ: 1371: பாவலரேறு அவர்களுக்கு என் பணிவான வணக்கங்கள்: என்னுடைய வேண்டுதலையேற்று, என்னுடைய அளியர் க. செல்வம் அவர்களின் திருமணத்தை நன்முறையில் நடத்தித் தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருமண நிகழ்ச்சியின் பொழுது, தங்களுக்கு ஏதேனும் இடைஞ்சல் ஏற்பட்டிருக்குமாயின் அதற்காகப் பொறுத்தருளுமாறு கேட்டுக் கொள்கிறேன். பழமையை விலக்கிப் புதுமையைப் புகுத்துங்கால் சிலர் அதை ஏற்க மறுப்பதும், ஏற்றுக் கொண்டுள்ளவர்களுக்கு உரிய நெறிமுறை பற்றித் தடுமாற்றங்கள் ஏற்படுவதும் இயல்பே. இவற்றையெல்லாம் புறந்தள்ளி மேற்கொண்ட வினையை முடிக்கும் தங்களின் பொதுத் தொண்டுணர்வுக்கு என்னுடைய வணக்கங்கள்.

தங்களின் அறிவொளி பொருந்திய திருமுகத்தையும் தமிழ் நலஞ் சார்ந்த அறிவுரையையும் ஒளியொலிப் (வீடியோ) பதிவு நாடா வழி நானும், என்னைச் சார்ந்தவர்களும் பல்லாண்டுக் காலம் பார்க்கவும், கேட்கவுமான தொரு வாய்ப்பையேற்படுத்தித் தந்தமைக்கு நன்றி. அன்புள்ள. —க. அரசு, பெங்களூர்-21

ஒ: 1372: பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு, தங்களுக்குப் பணிவான என் வணக்கங்கள்.—ஒவ்வொரு மாந்தனும் முதலில் பெறவேண்டியது அறிவு. ஏனெனில் ''அறிவுடையார் எல்லாம் உடையார்.'' அறிவு ஒன்றின் மூலம்தான் பிறர் நோயைத் தம் நோய் போல் கருதிப் பிறருக்கு உதவிகள் செய்யமுடியும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக ''நன்றின்பால் உய்ப்பது அறிவு.'' இப்படிப்பட்ட அறிவாக்கத்திற்குத் தமிழர்கள் செலவு செய்கிறார்களா என்றால் மிகமிகக் குறைவு. கீழ்த்தரமான காம உணர்ச்சிகளைத் தூண்டும்—நம்மை இழிவு-

Scanned with CamScanner

படுத்தும் இதழ்களை ஆர்வத்துடன் என்ன விலை கொடுத்தும் வாங்கிப் படிக்கும் தமிழர்கள் ஏராளம். ஆனால், ''தென்மொழி'' ''உண்மை'', போன்ற நற்றமிழ் ஏடுகளை இலவயமாகக் கொடுத்தாலும் வாங்கிப் படிக்க மறுக்கின்றனர்.

இ'து ஒரு புறமிருக்க-ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்திலும் பத்தியின் பேராலும் மூடநம்பிக்கையின் பேராலும் சடங்கு 'சம்பிரதாயங்களின் பேராலும் வீணாகும் செலவுகள் சொல்லி முடியாது. இப்படியெல்லாம் வீண் செலவு செய்யும் தமிழர்கள் பொருளை வீணாக்குவதுடன், தம்மைத்தாமே இழிவு படுத்திக் கொள்ளும் செயல்களிலும் ஈடுபடுகின்றனர். இவற்றிற்குப் பகரமாக தம் வருமானத்தில் நூற்றில் ஒருபங்குகூட வேண்டாம்-அந்த ஒன்றில் கால் பகுதி செலவிட்டாலும் பெரியதோர் உயர்வினைக் கண்டிருக்கலாம். இவர்களின் அறியாமையைத் தங்களின் வருவாயாக மாற்றிக் கொள்ளும் திடீர்த் தலைவர்களும் புரட்சி வீரர்களும் தமிழகம் முழுமையும் உலா வருகிறார்கள். தாங்கள் கூறியுள்ளதைப் போல,

''இனிமைப் பேச்சினில் எல்லாரும் வெல்கிறார்!''
''மனநலம் இருந்திடில் அல்லவோ மக்களின்
மாண்பினைக் காத்திட எண்ணுவர்''.

இதுபோன்ற வேண்டாத தலைவர்களுக்கு ஏடுகளில் கண்ணைப் பறிக்கும் விளம்பரங்கள். இவர்களும் தங்களால்தாம் உலகமே சுழல்கிறது என்ற நினைப்பில் நடந்துக் கொள்ளும் முறையோ சொற்களால் கூறமுடியாது. இன்னொன்றையும் இவ்விடத்தின் கண் கூற விரும்புகின்றேன். உயிரோடு இருக்கும்வரை நல்லவர் ஒருவரை யாருமே கண்டுகொள்வதில்லை. அவர் இறந்தபின் அவர் புகழ் பாடுவதும் அவரைப் பற்றி விழாக்கள் கூட்டுவதும் தமிழகத்தில் வாடிக்கையாக நடந்து வருகின்ற ஒரு செயல்!

—கோ. இரவிசந்திரன், சென்னை-14

ஒ: 1373: தாங்கள் பேருந்திலிருந்து தவறி விழுந்ததை இந்தக் கிழமை தமிழ்நிலம் மூலம் அறிந்து வருந்தினேன், உள்ளம் உருகியது. தமிழ் உணர்வே அருகிப்போயிருக்கும் இத்தமிழர்க்காகத் தாங்கள் படும் துன்பம் ஒவ்வொன்றும் என் துன்பமாக எண்ணி வருத்தப்படுகிறேன். கலைஞர் பாவேந்தர் விழாவில் தங்களைப்புறக்கணித்ததைப் பற்றி ஓர் அன்பர் எழுதியிருந்தார். தமிழ்க்குடிமகன் என்ன செய்கிறார்? தங்களைப் பற்றி நன்கு அறிந்தவராயிற்றே! என்ன உதவி தங்கட்கு—தென்மொழிக்குச்—செய்து விட்டார்? ''உயர்ந்த பதவி கிடைத்ததும் தங்களை வந்து பார்ப்பார்; பொழிலன், முகிலன் முதலியோர் விடுதலைக்கு ஏதேனும் செய்வார்'' என எதிர்பார்த்தேன். தென்மொழியையும் தங்களையும் எப்படி திரு. தமிழ்க்குடிமகனால் மறக்க புறக்கணிக்கமுடிகிறது! கலைஞரைவிட்டால் அரசியல் சூழ்ச்சி மிகுந்தவர் (தமிழ்ப்பற்றுள்ளவர் பலர் உள்ளனர்—ஆனால் அரசியலில் சாய்கால் உள்ளவராய் யாரும் இல்லை) என்பதால்தான் கலைஞரை ஆதரிக்கின்றோம்; வேறு வழியின்றி. திரு. தமிழ்க்குடிமகன்தான் தங்களைப் பற்றியும் தென்மொழி, தமிழ்நிலம் பற்றியும், செய்யவேண்டிய உதவி பற்றியும், கலைஞருக்கு எடுத்துக்கூற வேண்டியவர். கலைஞர் முதல்வர் பதவி தமிழுணர்வைக் காட்டிலும் பெரிதென்று எண்ணுகிறவர்! விலை கொடுக்காமல் விடுதலை கிடைத்தால்தான் தலைமை அமைச்சராக (தமிழ்நாட்டுக்கு) வேண்டும் என எண்ணுகிறார்.

—செயராமன், வணி.மு, பொள்ளாச்சி

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)

Scanned with CamScanner